பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 16 திங்கட்கிழமை (29-03-2004) தொலைபேசி - 2223378 ஒலி 101

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க படையினருக்கு தளபதி உத்தரவு

(நமது நிருபர்)

**ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள 13வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்குரிய சகல பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பாதுகாப்புப் படையினருக்கு இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பல்லேகல்ல உத்தரவிட்டுள்ளார்.**

தலைநகர் கொழும்பில் முன்னாள் இந்து கலாசார அமைச்சரும், ஐக்கியதேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான தி.மகேஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும், தெரிவத்தாட்சி அலுவலருமான இ. மௌனகுருசாமி ஆகியோர் இனந் தெரியாத துப்பாக்கி நபர்களினால் சுடப்பட்டதையடுத்து இராணுவத் தளபதி லயனல் பல்லேகல்ல மேற்கண்ட உத்தரவை விடுத்துள்ளார்.

பொதுத்தேர்தல் கடமைக்கென நாடெங்கும் ஈடுபடுத்தப்படவுள்ள 64 ஆயிரம் பொலிஸாருக்கு அவர்களது பாதுகாப்புக்கடமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இராணுவத் தளபதி உத்தரவிட்டதை யடுத்து, தலைநகர் கொழும்பிலும், மட்டக்களப்பிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தேர்தலுக்கு வழங்கப்படவிருக்கும் பாதுகாப்பு சம்பந்தமான உயர்மட்ட மாநாடு ஒன்றை, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பல்லேகல்ல நேற்று நடத்தியிருந்தார்.

இம்மாநாட்டில் பாதுகாப்புப் படைகளின் உயரதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாட்டின் எந்தவொரு பாகத்திலும் தேர்தல் வன்முறைகள் வெடிக்கும் பட்சத்தில் பொலிஸார் இராணுவ உதவியைக்கோரினால் அவர்களுக்கு இராணுவத்தினர் உதவ வேண்டுமென இந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் (12ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டைவிட்டு வெளியேற சோமவன்ச திட்டம்

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஏப்ரல் 2ஆம் திகதி தேர்தல் நடைபெறும் தினத்திற்கு 48 மணிநேரத்திற்கு முன்பதாக நாட்டைவிட்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. உடன்படிக்கை கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து இலங்கை வந்திருந்த சோமவன்ச தற்போது எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதி மீண்டும் செல்வதற்காக அவசரமாக ஒருவழிப்பயண விமான டிக்கெட்டைப் பதிவுசெய்துள்ளார். இச்செய்தி புலனாய்வுத் தகவல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பாதுகாப்பு பணிகளுக்காக வடக்கு - கிழக்கில் பொலிஸாருடன் விஷேட அதிரடிப்படையும் இணைப்பு

எதிர்வரும் பெதுத்தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக நாடளாவிய ரீதியில் 63 ஆயிரத்து 783 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகப் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

நீதியாகவும் நியாயமான முறையிலும் தேர்தல் நடைபெறுவதற்கு ஏற்ற வகையில். பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு பொலிஸார் நாளை செவ்வாய்க் கிழமைமுதல் நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பாதுகாப்புக் கடமைகளுக்காக ரோந்து சேவையில் 6ஆயிரத்து 483 பொலி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மகேஸ்வரன் மீதான துப்பாக்கிச்சூடு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும்

### அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மீதான துப்பாக்கிச் சூட்டுக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் மின்சக்தி எரிசக்தி அமைச்சருமான கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சு தற்போது ஜனாதிபதியின் கையிலேயே இருக்கிறது. இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஒருவர் சுடப்பட்டிருக்கிறார் எனின், ஜனாதிபதியே அதற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்கவேண்டும். ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பெறுப்பேற்ற பின்னர் பாதுகாப்பு சீர்குலைந்துள்ளது என்பதையே இது காட்டுகிறது. பொதுத் தேர்தலுக்கு இன்னமும் ஒருசில தினங்களே இருக்கும் நிலையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் மருத்துவமனையில் மகேஸ்வரனுக்குச் சிகிச்சை

(கொழும்பு)

கொழும்பு ஜிந்துப்பிட்டியில் வைத்து நேற்று முன்தினம் சுடப்பட்ட முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் உடல் நிலை தேறிவருவதாக வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தை அடுத்து கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த மகேஸ்வரன் நேற்றைய தினம் தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு மாற்றப்பட்டார்.

பாதுகாப்புக் காரணம் கருதியே தனியார் வைத்தியசாலை ஒன்றிற்கு அவர் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை, மகேஸ்வரன் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்வம் தொடர்பாக பொலிஸார் தீவிர புலன் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, இனந்தெரியாத நபரினால் சுடப்பட்ட மட்டக்களப்பு அரச அதிபர் மௌனகுருசாமி கொழும்பு வைத்தியசாலையொன்றில் சிகிச்சைபெற்று வருவதாகவும், அவரும் ஆபத்தான கட்டத்

(12ஆம் பக்கம் பார்க்க)



கொடிய யுத்தம் மீண்டும்
ஏற்படாது தடுத்து
பேச்சுவார்த்தை தொடர...



(சி-0031)
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு க.சுரேஷ் பிரேமச்சந்திரன்



படுகொலைகள் அற்ற, வன்முறைகள் அற்ற, அச்சுறுத்தல்கள் அற்ற, அடக்குமுறைகள் அற்ற, மிரட்டல்கள் இல்லாத வாழ்க்கையை யுத்தநிறுத்தமும் சமாதானமும் எமக்குத் தந்ததா?

அர்த்தமுள்ள சமாதானத்தை வலியுறுத்தி வாக்களியுங்கள்



திருநாவுக்கரசு ஸ்ரீதரன் - ஈ.பி.ஆர்.எல்.எவ்.
(சி-0033)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.:
021 222 3916
0777 801038
கொழும்பு:
T.P.: 2390128
Fax: 2399650
Mob: 0777 517019

## நாட்டைவிட்டு...

கள் மூலம் தமக்குத் தெரியவந்துள்ளதாக ஐக்கியதேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சோமவன்ச முன்னெச்சரிக்கையுடன் மார்ச் 31 அன்று மட்டும் மூன்று வெவ்வேறான பதிவுகளை மேற்கொண்டுள்ளார். விமானத்தின் பிஸ்னஸ் வகுப்பில் இம்மூன்று பதிவுகளும் செய்யப்பட்டுள்ளன. அதில் முதலாவதாக எஸ். அமரசிங்க என்ற பெயரில் யு.எல்.503 விமானத்திலும் (கொழும்பிலிருந்து 1.35 மணிக்குப் புறப்பட்டு லண்டன் செல்லும்) மற்றையது தி. சோமவன்ச என்ற பெயரிலும் மூன்றாவது யு.எல். 565 விமானத்திலும் (மு.ப.11.20 மணிக்குப் புறப்பட்டு பாரிஸ் செல்லும்) டிக்கெட்டுக்களுக்கு பதிவு செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கியதேசியக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் முதல்வேலையாக சோமவன்சவைக் கைது செய்வதேயாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறியதையடுத்து, தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தோற்கடிக்கப்பட்டால் தாம் கைதுசெய்யப்படலாம் என்ற பயம் காரணமாக நாட்டைவிட்டு வெளியேற திட்டமிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ச-6)

## ஜோசப் பரராசசிங்கத்திற்கு தொடர்ந்து அச்சுறுத்தல்

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் ஜோசப் பரராசசிங்கத்திற்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது -

தொலைபேசிமூலம் விடுக்கப்படும் இவ் அச்சுறுத்தல்களில், தேர்தலில் இருந்து ஒதுங்கி கொழும்பு செல்லுமாறும் அப்படிச் செல்லாதவிடத்து ஏற்படும் அசம்பாவிதங்களுக்கு தாம் பொறுப்பாக மாட்டோம் என்றும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இதேவேளை ஜோசப் பரராசசிங்கத்தின் தற்போதைய பாதுகாப்பு இரட்டிப்பாக்கப்பட்டு 8 பொலிஸார் அவரது வீட்டினிலே காவல் கடமையில் ஈடுபட்டிருப்பதாகவும், அவரிடம் செல்லும் அவரது ஆதரவாளர்கள் கடுமையான சோதனைக்குட்படுத்தப்படுவதாகவும் அவரது வீட்டைச் சுற்றி விசேட அதிரடிப் படையினர் தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ம)

## மகேஸ்வரன்...

அரசியற் கட்சிகளுக்கிடையிலான தீவிரப் போட்டித்தன்மைக்கு வேட்பாளர்கள பலியாகாமல் இருப்பதை பாதுகாப்பு அமைச்சைத் தன்வசம் வைத்துள்ள ஜனாதிபதி உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என அமைச்சர் கரு ஜெயசூரிய மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(த)

## பொலிஸாருக்கு...

இ.மௌனகுருசாமி சுடப்பட்டதையடுத்தும் அதற்கு முன்னதாக அம்மாவட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்தும், அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இங்கு பொலிஸ், இராணுவம், அதிரடிப்படையினர் கூட்டுச்சேர்நது பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். வீதிகளில் செல்லும் வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டு வருவதாகவும், இதனால் மக்களின் வீதி நடமாட்டம் குறைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ம)

## வடக்கு...

ஸாரும், வாக்களிப்பு நிலையங்களில் 21 ஆயிரம் பொலிஸாரும், வீதிச்சோதனை நடவடிக்கைகளில் 8ஆயிரத்து 250 பொலிஸாரும் வாக்கெண்ணும் நிலையங்களில் 2800 பொலிஸாரும் தேர்தல் காலத்தில் பொலிஸ் நிலையங்களுக்கான விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் 5ஆயிரத்து 993 பொலிஸாரும், விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் 19ஆயிரத்து 257 பொலிஸாரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

கடந்த காலங்களில் அதிகளவு தேர்தல் வன்முறைகள் இடமபெற்ற இடங்களுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொளளப்படவுள்ள அதே நேரம், வடக்கு, கிழக்கில் பொலிஸ் பாதுகாப்பினை விடவும் மேலதிகமாக விசேட அதிரடிப்படையினரையும் பாதுகாப்புக்கடமையில் ஈடுபடுத்துவதற்குப் பொலிஸ் திணைககளம் தீர்மானித்துள்ளது. இதேவேளை, இம்முறை தேர்தல்கால பாதுகாப்புப் பணிகளுக்கெனத் தேர்தல் திணைக்களத்தால் ஒரு மில்லியன் ரூபா நிதி பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தனியார்...

தைத் தாண்டிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு அரச அதிபர் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கினறன.

(ம)

## விசாரணைக்குழு இன்று ஆராய்வு

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் பற்றி விசாரணை செய்யவென நியமிக்கப்பட்ட ஆணைக்குழு இன்று கூடி ஆராயவுள்ளது.

சுகாதார ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் நீக்கப்பட்டதை அடுத்து ஏனைய அரச ஊழியர்களும் தமது சம்பள அதிகரிப்பை வழங்குமாறுகோரி வேலை நிறுத்தப் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்திவந்தனர்.

இதனை அடுத்து சகல அரச ஊழியர்களினதும் சம்பள முரண்பாடுகள் பற்றி விசாரணை செய்யவென நிதியமைச்சினால் நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டது.

ரி.பி.யோகேஸ்வரன் தலைமை தாங்கும் இந்தக் குழு தமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விரிவாக இன்று ஆராயவுள்ளது.

(60,10)

THE ROYAL COLLEGE OF JAFFNA
426(302)k.k.s. வீதி,
யாழ்ப்பாணம்.
பிளாக்வீதி, சங்கானை.
எமது பாடசாலையில் பயின்று (O/L) சித்தி பெற்ற சகல மாணவர்களுக்கும் எமது பாராட் டுக்கள.
(8473) ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2004.04.02
1987இல் இடம்பெயர்ந்த மக்களுக்கு அவர்கள் இருக்கும் இடம்தேடி
சங்கக் கிளைகளைத் திறந்து மக்களுக்கு உதவி செய்த
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்

திரு.சி.சிவமகாராசா
அவர்களை ஆதரிப்போம்
வீட்டுச் சின்னத்திற்கு நேரேயும்
இலக்கம் 8 இன் மேலேயும்
புள்ளடியிடுவோம்.
(C-0032)
இலங்கை தமிழரசுக் கட்சி 8

யாழ்ப்பாணத்தில் 72 வருடகால அனுபவம் பெற்ற மதுபான விற்பனையாளர்கள் மீண்டும் வாடிக்கையாளர் நலன் கருதி
243 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரியில் விற்பனையை ஆரம்பித்துள்ளார்கள்
உள்நாட்டு வெளிநாட்டு மதுபான வகைகளை பெற்றுக் கொள்ள நாடுங்கள்
ஆ. வேலுப்பிள்ளை அன் சன்ஸ்
243 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் ஸ்தாபிதம் - 1932
(சி-7383)

# மகேஸ்வரன் மீதான தாக்குதலுக்கு மலையக மக்கள் முன்னணி கண்டனம்

(கொழும்பு)

கொழும்பு ஜிந்துப்பிட்டியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்ட முன்னாள் இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரனை மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டார்.

மலையக மக்கள் முன்னணித் தலைவரும், அமைச்சருமான பெ. சந்திரசேகரனின் பணிப்பின் பேரிலேயே இராதாகிருஷ்ணன், மகேஸ்வரனைச் சென்று பார்வையிட்டார்.

இதேவேளை, கொழும்பு ஜிந்துப்பிட்டியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் சுடப்பட்ட சம்பவத்திற்கு அமைச்சர் பெ.சந்திரசேகரன் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், நேற்று கொழும்பு ஜிந்துப்பிட்டியில் நடைபெற இருந்த மலையக மக்கள் முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தையும் ரத்துச் செய்துள்ளார். (61,10)

# சட்டவிரோத மின்சாரம்

(கோப்பாய்)

கோப்பாய் மத்திய பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோர் தொகை அதிகரித்து வருவதாகக் கூறப்படுகின்றது. கூடுதலாக வாழைத்தோட்டச் செய்கையாளர்களே பகல் வேளைகளில் பகிரங்கமாக சட்டவிரோத மின்சாரம் பெற்று நீர் இறைத்து வருகின்றனர். (உ-70)

நாளை ஆரம்பமாகிறது

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகை

மனிதம் எமது பாடல்

மனிதம் எமது தேடல்

## காவிய நாயகன்

மன்ற அரங்கில்

(திருப்பாடுகளின் காட்சி)

மார்ச் 30,31, ஏப்ரல் 01,03,04-2004

மாலை 7.00 மணி

(செவ்வாய், புதன், வியாழன், சனி, ஞாயிறு) (5 நாள்களுக்கு)

குறிப்பு:- பார்வையாளர்கள் ஆசனங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். ஆசனப்பதிவுகளை யாழ். மன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம். **அன்பளிப்பு 30.00**

மனிதத்துவத்தின் தேடலுக்கான கல்வாரிப் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P/Fax 021-222 2393
E-mail: cpajaffna @ sltnet.lk
website: www.cpateam.org

திருமறைக் கலாமன்றம்

(சி-7470)

## பாராளுமன்றத் தேர்தல் - 02.04.2004

## 24.03.2004, 25.03.2004ஆந் திகதிகளில் அஞ்சல் மூலம் வாக்குச் சீட்டு அடையாளமிட முடியாத அஞ்சல் வாக்காளர்கள்

02.04.2004ஆந் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் அஞ்சல் வாக்காளர்களாக அனுமதிக்கப்பட்டு இதுவரை வாக்களிக்க முடியாதுள்ள அஞ்சல் வாக்காளர்கள் அனைவரும் தங்களுடைய அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை ஏப்ரல் 2ஆந் திகதி வரை அடையாளமிட முடியுமென சகல அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய உறைகள் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் தபாலில் சென்றடையும் கால இடைவெளியை கருத்திற் கொண்டு விரைவாக சகல அஞ்சல் வாக்காளர்களையும் வாக்குச் சீட்டுக்களை அடையாளமிட வலியுறுத்துமாறு சகல அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களையும் கேட்டுக் கொள்கிறேன். அதுபோல் இதுவரை வாக்களிக்க முடியாது போன அஞ்சல் வாக்காளர்களும் தங்களது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களிடம் சென்று வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய உறைகள் இடப்படும் வாக்குப்பெட்டி 02.04.2004ஆந் திகதி பி.ப. 4 மணிக்குப் பொறியிடப்படுமாதலால் சகல தபால் வாக்குச் சீட்டுக்களும் அத்தினத்தின் உரிய நேரத்திற்கு முன்னர் வாக்குப் பெட்டியில் இடுவதற்கு தெரிவத்தாட்சி அலுவலரிடம் கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி சகலரினதும் அவதானத்தை கோருகின்றேன்.

*தேர்தல் செயலகம்,*
*சரண மாவத்தை,*
*இராஜகிரிய.*
*27. 03. 2004*

தயானந்த திஸாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

(சி-0029)

## பொதுத் தேர்தல்-2004-04-02

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தந்தை செல்வாவின் தொண்டன். தமிழ் தேசத்தின் மூத்த போராளி. 40 ஆண்டுகளுக்கு மேலாக பள்ளிப் பருவத்திலிருந்து தமிழ் மக்களின் விடுதலைக்கு ஓயாது, தலை சாயாது போராடி வருபவர். களம் பல கண்டவர். சிறைச் சாலைகளில் சித்திரவதைப்பட்டவர். நேர்மை, தூய்மை, தியாகம் நிறைந்த தமிழ் மகன்.



**மாவை சேனாதிராசா** அவர்களே எம் தெரிவு

(யாழ். மாவட்டத்தின் முதன்மை வேட்பாளர், (பொதுச் செயலாளர், தமிழரசுக்கட்சி)

இலக்கம் 12

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி X 12

முதலில் வீட்டுச் சின்னத்திற்குப் பக்கத்தில் புள்ளடியிட்டு அதன் பின் இல. 12க்கு மேலே புள்ளடியிடுங்கள்.

—அச்சுவேலி வாழ் மக்கள்.

(சி-0030)

# இந்திய-பாக்.கிரிக்கெற் தொடரில் சூதாட்டம் இடம்பெறவில்லை

## ஐ.சி.சி.வன்மையாக மறுப்பு

பாகிஸ்தானில் நடைபெற்று வரும் இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெற் தொடரில், சூதாட்டம் நடந்திருப்பதாக ஏற்பட்டுள்ள சர்சைகளை சர்வதேச கிரிக்கெற் சபை கடுமையாக மறுத்துள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான 5போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரை 3:2என்ற அடிப்படையில் இந்தியா வென்றது. இந்தத் தொடரானது, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது என்றும் இதில் சூதாட்டம் நடந்திருக்கிறது என்றும் பாகிஸ்தானின் முன்னாள் அணித்தலைவர் ரஷிட் லத்தீப் உட்படப் பல பேர் குற்றம்சாட்டியுள்ளனர். இந்தச் சூதாட்டச் சர்சைக்குச் சர்வதேச கிரிக்கெற்சபை தற்போது முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது.

இவ்விடயம் சம்பந்தமாக சர்வதேச கிரிக்கெற் சபையின் தலைமை நிர்வாகி மல்கம் ஸ்பீட் வெளியிட்ட அறிக்கையில் சூதாட்டத்தை தடுப்பதற்காகச் சர்வதேச அளவில் நடக்கும் ஒவ்வொரு கிரிக்கெற் போட்டியையும் ஐ.சி.சி.ஊழல் கண காணிப்புக்குழு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

இதனடிப்படையில் இந்திய-பாகிஸ்தான் தொடரையும் நாங்கள் வெகு தீவிரமாக கண்காணித்தோம் வீரர்கள் அறைகளுக்குச் செல்லும வழிகளில் கமரா பொருத்துவது, வீரர்கள் கையடக்கத் தொலைபேசி வைத்திருக்கத் தடைவிதித்தது போன்றன உட்பட அதிகபட்சக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இந்தத் தொடரில் சூதாட்டம் நடக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி போட்டித் தொடரில் சூதாட்டம் இடம்பெறவில்லை என ஊழல் கண்காணிப்புக்குழு அதிகாரிகள் உறுதிசெய்துள்ளனா். அதையும் மீறி சூதாட்டப் புகார் தொடர்ந்து எழுப்பப்படுவது, கிரிக்கெற் மீதான கண்ணியத்தைக் குறைப்பதாக உள்ளது. எனவே புகார் சொல்பவர்கள் இனி ஆதாரத்துடன் சொல்ல வேண்டும் என மல்கம் ஸ்பீட் மேலும் தெரிவித்துள்ளார். (121)

# உதிரிப் பந்து வீசுவதில் பாக்.அணி உலகசாதனை

சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டி வரலாற்றில் உதிரிகள் வீசுவதில் பாகிஸ்தான் கிரிக்கெற் அணி உலகசாதனை படைத்துள்ளது.

கிரிக்கெற் வரலாற்றைப் பொறுத்தவரையில்,உதிரி என்பது வெற்றிக்கு எதிரியாகவே கருதப்படுகிறது.நோ-போல்(முறைதவறிய பந்து),வைட்போல் (அகலப் பந்து) என்பவற்றை எதிரணிக்கு அள்ளிக கொடுத்தால் எதிரணியின் ஓட்டங்கள் உயர்வதோடு, ஓவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

இப்படியான உதிரிகளை மிகவும் அதிகம் வழங்கிய அணி எதுவென்றால் அது பாகிஸ்தான் அணியாகவே காணப்படுகின்றது.

பாகிஸ்தானின் லாகூர் மைதானத்தில் இந்தியாவுக்கு எதிரான நான்காவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் 37வது ஓவரின் முதல் பந்தை சொய் அக்தர் நோ-போலாக வீசினார். அந்த ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் வழங்கிய 11ஆயிரமாவது உதிரி அது தான்.

கிரிக்கெற் வரலாற்றில் 11ஆயிரம் உதிரி வழங்கிய முதல் அணி என்ற புதிய சாதனையையும் தற்போதைய பாகிஸ்தான் அணி நிலைநாட்டியுள்ளது.

அதிகஉதிரிகள் வழங்கிய அணிகள்

1வது பாகிஸ்தான்-11ஆயிரம் (இந்தியாவுடனான இறுதிப் போட்டிக்கு முன்னர்)

2வது இந்தியா-8994

3வது மேற்கிந்தியா-8534

4வது அவுஸ்திரேலியா-8310

பாகிஸ்தான் அணியின் உதிரிகள் வரிசையில் வைட்(4058) நோபோல் (1904) பைட்(816) லெக்பைட்(4223) என்பன அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (121)

# டெஸ்ற் தொடரை அவுஸ். கைப்பற்றியது

(கொழும்பு)

இலங்கை-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் கொழும்பு எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நடைபெற்ற 3வது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 121 ஓட்டங்களால் வெற்றிபெற்று டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது.

மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இலங்கையணி போட்டியில் வெற்றிபெறுவதற்கு 370 ஓட்டங்களைப் பெற வேணடிய நிலையில், அதன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக விளையாடி போட்டி முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 248 ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வியைத் தழுவியது இரண்டாவது இன்னிங்ஸிற்காக திலான் சமரவீர 53 ஓட்டங்களையும், சனத் ஜெய சூரிய 51 ஓட்டங்களையும், மஹேலே ஜெயவர்த்தன 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் ஷேன்வோன் 92 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், டரல் லீமன் 42 ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

இலங்கைக்கு எதிராக இந்தத் தொடரின்போது ஷேன்வோன் மொத்தமாக 26 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார். டெஸ்ட் தொடரின் சிறப்பாட்டக்காரராகவும் ஷேன்வோன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

எனினும், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கொட்னிலோசின் 519 என்ற உலக சாதனையையும் 2 விக்கெட்டுக்களால் அவரால் சமப்படுத்த முடியாமல் போயுள்ளது. இதேவேளை, மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியின் சகல துறைகளிலும் பிரகாசித்த டரல் லீமன் சிறப்பாட்டக்காரராகத் தெரிவு செய்யப்பட்டார்.

*ஸ்கோர் விபரம்*

முதலாவது இனிங்ஸ்

அவுஸ்திரேலிய அணி 401 ஓட்டங்கள்

டரல் லீமன் 153

றிக்கி பொண்டிங் 92

இலங்கை அணி 407 ஓட்டங்கள்

மாவன் அத்தப்பத்து 118

சனத் ஜெயசூரிய 71

ஹசான் திலகரட்ண 74 (ஆட்டமிழக்காமல்)

இரண்டாவது இனிங்ஸ்

அவுஸ்திரேலிய அணி 375 ஓட்டங்கள்

ஜஸ்டின் லாங்கர் 166

சைமன் ஹட்ரிக் 86

இலங்கை அணி 248 ஓட்டங்கள்

திலான் சமரவீர 53

சனத் ஜெயசூரிய 51

(ச-121)

# ஆட்டத்தை ரசிக்காத முட்டாள்களே வீண் புரளிகளைக் கிளப்புகின்றனர்

## வசீம் அக்ரம் மனவருத்தம்

இநதிய-பாகிஸ்தான் கிரிக்கெற் தொடரின் நோக்கம் முழுமையாக நிறைவேறி விட்டதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும் சாதனை வீரருமான வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இநதிய-பாகிஸ்தான் கிரிக்கெற் போட்டிகளை காண பாகிஸ்தான் வந்த் இந்திய ரசிகர்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களது சொந்த மண்ணில் போட்டிகளைக் கண்டு களிப்பது போன்றே உணர்ந்தனர்.

இத் தொடரின்போது பல்வேறு தரப்பட்ட இந்திய ரசிகர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு எமக்குக் கிட்டியது. அவர்கள் எல்லாம் நாங்கள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மிகச் சிறப்பான வரவேற்றுபு வழங்குகிறார்கள்.

சிறப்பாக நடந்துகொண்டிருக்கும் தொடரில் சூதாட்ட சர்ச்சை எழுப்பப்பட்டிருப்பதுதான் வேதனை அளிக்கிறது. ஒருநாள் தொடர் 2:2என்ற சமநிலை எட்டப்படவேண்டும் என்பதற்காகத்தான் நான்காவது போட்டியின் முடிவு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். தரமான ஆட்டத்தை ரசிக்க தெரியாத முட்டாள்கள் வேண்டும் என்றே மக்கள் மனதில் சந்தேகத்தை விதைக்க முயல்கின்றனர்.

ஆதாரமற்ற இவ்வாறான குற்றச்சாடடுக்களை ஒருபோதும் நம்ப வேண்டாம் என ரசிகர்களைக் கேட்டுக்கொள்கிறேன் இவ்வாறு மன வருத்தத்துடன் அக்ரம் கூறினார்.

(உ-121)

## ஹொக்கி காலிறுதிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடாத்தப்பட்டுவரும் ஹொக்கிப் போட்டிகளின் காலிறுதிப் போட்டிகள் இன்று திங்கட்கிழமையும் நாளையும் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று பி.ப.4.30மணிக்கு யாழ்ப்பாணக்கல்லூரி எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் (ஏ) விளையாட்டுக்கழகமும், பி.ப.5.15 மணிக்கு ஓல்ட் கோல்ட் விளையாட்டுக்கழகம் எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் (பி) விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (18)

# கைதடி வன்முறைச் சம்பவத்துக்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை

## யாழ். மாவட்ட அரசியல்துறை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள் எதுவித இடையூறுகளும் அற்ற வகையில் பிரசாரப் பணிகளில் ஈடுபடுவதை ஜனநாயக உரிமைகளின் உன்னத வெளிப்பாடாகவே கருதுவதுடன்,அதற்கு எமது பூரண ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றோம் எனது தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலமாக யாழ்.குடாநாட்டில் இடம்பெற்று வரும் தேர்தல் வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக நேற்று யாழ். மாவட்ட அரசியல் துறையினரால் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களது ஜனநாயக உரிமைகளுக்குத் குந்தகம் விளைவித்தால் சில குறுக்கு வழியாளர்கள் மக்களது வெறுப்பையே சம்பாதித்து வருகின்றனர். மக்களது அபிலாஷைகளைப் புறக்கணித்து விட்டு இவர்கள் படையினரது துணையுடன் செயற்படுவது மக்கள் மத்தியில் மேலும் வெறுப்புணர்வினை உருவாக்கிவருகின்றது. இது தொடர்பாக இக் குறுக்கு வழியாளர்கள் மக்கள் மீதும் விடுதலைப் புலிகள்மீதும் பொய்க்குற்றச் சாட்டுக்களை சுமத்துகின்றனர்.

அந்த வகையில், நேற்று முன்தினம் கைதடிப் பகுதியில் மக்களின் இயல்பான வெறுப்புணர்ச்சியால் விளைந்த சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளே காரணம் என சம்பந்தப்பட்டவர்கள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்து வருகின்றமை உண்மைக்கு புறம்பான விடயம். இதற்கும் எமக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.

இதே போன்று சாவகச்சேரிப் பகுதியிலும் வாகனம் ஒன்றில் வந்த புலிகள் தம்மை அச்சுறுத்தியதாக சிலரால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை. மக்களோ, புலிகளோ இவர்களது பிரசார நடவடிக்கைகளுக்கு எதுவித குறுக்கீடுகளையும் செய்யவில்லை.

படையினரின் பாதுகாப்புடன் இவர்களுக்கு மக்களோ, புலிகளோ எவ்வகையில் அச்சுறுத்தல் விடுக்க முடியும்? ஏற்கனவே பாவனையில் இருக்கும், எமது உறுப்பினாகளின் வாகன இலக்கங்களை எடுத்து தமது பொய்க் கூற்றச்சாட்டுக்களினை ஆதாரப்படுத்த முனைவது வேடிக்கையானதே.

தமிழ் மக்கள் தமது இலட்சியத்தை அடைவதற்காக அணியில் திரள்வது தெளிவாகியுள்ளதால, அராஜகவாதிகளாகிய சிலா ஆத்திரப்படுகின்றனா். இதன் விளைவாகவே இத்தகைய பொய்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுக்கள் மூலம் இராணுவத்தினரை தூண்டிக் கைதடியில் உளள எமது பணிமனையை சுற்றி வளைக்க முறபட்டுள்ளனர்.

இப்படியான செயற்பாடுகள் பாரதூரமான பின் விளைவுகளை ஏற்படுத்தும் என நாம் கருதுவதுடன், எமது கண்டனங்களையும் வெளியிடுகினறோம்,

அத்துடன், இவர்களது சீண்டல்களுககு எடுபடாது மக்கள் அமைதி காத்து, இலட்சியத்தை எட்ட உழைக்கு மாறும் வேண்டுகிறோம் எனவும் அவ் அறிக்கையில மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(18,4)

# உரிமையாளரைத் தாக்கிவிட்டு கொள்ளையர்கள் கைவரிசை

## புங்குடுதீவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீடு புகுந்து உரிமையாளரைத் தாக்கிய கொள்ளையர்கள் பல இலட்சக் கணக்கான பெறுமதியுடைய பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி நள்ளிரவு புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தில் உள்ள கந்தராஜா என்பவரது வீட்டில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது.

சம்பவ நேரம் திடீரென வீட்டினுள் புகுந்த சுமார் 10 பேர் கொண்ட கொளளையர் கும்பல் ஒன்று பிரஸ்தாப வீட்டின் உரிமையாளரைத் தம்வசம் இருந்த் ஆயுதங்களால் தாக்கி காயப்படுத்திவிட்டு வீட்டிலுள் இருந்த தொலைக் காட்சிப் பெட்டி, டெக், மோட்டார்சைக்கிள் எனப் பல பெறுமதிமிக்க பொருட்களைச் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த வீட்டின் உரிமையாளரான கந்தராஜா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (4,19)

## இரு ஊடகங்களுக்கு தடை உத்தரவு

இலத்திரனியல் ஊடகங்களுக்கு விதிக்கப்பட்ட தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட குறறச்சாட்டின் அடிப்படையில், இரு ஊடகஙகளுக்கு கொழுமபு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளுக்கென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவினால் ஏற்கனவே சில விதிமுறைகள் விதிக்கப்பட்டிருந்தன.

ஆயினும், இந்தத் தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறி ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீனத் தொலைக்காட்சி நிறுவனம் ஆகியன செயற்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளா மலிக் சமரவிக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் தாக்கல செய்த மனுவை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம், இவ இரு ஊடக நிறுவனங்களுக்கும தடையுததரவைப் பிறப்பித்துள்ளது.

இந்தத் தடை உத்தரவானது, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வரை அமுலில் இருக்குமெனபது குறிப்பிடத்தக்கது. (உ -61,18,6)

# இன்று ஒரு தகவல்

## வாழ்வின் முடிச்சுக்கள்

காலை நேரம். சீடர்கள் காத்துக்கொண்டிருந்தனர். புத்தர் அவர்களுடன் பேசுவதற்காக வருகிறார். வரும்போது கையில் ஒரு துணியை எடுத்துக்கொண்டு வருகிறார். சிறிய துணி. புத்தர் வந்து மேடையில் அமர்ந்தார். எதுவும் பேசாமல் அந்தத் துணியில் முடிச்சுக்கள் போட ஆரம்பித்தார்.

சீடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன இது வழக்கமாகப் பேசுபவர் இப்போது அதற்கு மாறாக வேறு எதையோ செய்து கொண்டிருக்கிறாரே என்று நினைத்தனர். சரி இருக்கட்டும் என்று மௌனமாக அதைக் கவனித்துக் கொண்டிருந்தனர். புத்தர் தலை நிமிராமல் அவர் பாட்டிற்கு முடிச்சுப்போட்டுக்கொண்டிருந்தார்.

ஐந்து முடிச்சுக்கள் போட்ட பின்பு தலைநிமிர்ந்து பேச ஆரம்பித்தார். "சீடர்களே! இப்போது நான் ஐந்து முடிச்சுக்கள் போட்டேன் இதை அவிழ்க்கப் போகிறேன். அவிழ்ப்பதற்கு முன் உங்களிடம் இரண்டு கேள்விகள் கேட்கப்போகிறேன். முதல் கேள்வி என்னவென்றால் முன்பு நான் வைத்திருந்த துணியும், இப்போதுள்ள முடிச்சு விழுந்த இந்தத் துணியும் ஒன்றா?" என்று கேட்டார். உடனே ஒரு சீடன் எழுந்தான். "பெருமானே! ஒரு வகையில் எல்லாம் ஒன்று தான். முன்பு இருந்ததும் இப்போது இருப்பதும் ஒன்றுதான். முடிச்சுக்கள் மட்டும் அதில் வித்தியாசம். ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டுள்ளது" அவ்வளவு தான்.

"முன்பு இருந்த துணி சுதந்திரம் உடையது. முடிச்சு விழுந்ததும் அதன் சுதந்திரம் போய்விட்டது. இப்போது இந்தத்துணி அடிமைப்பட்டுக் கிடக்கிறது" என்றான். "ஆமாம்! நீ கூறுவது சரிதான். ஒரு வகையில் ஒரே துணி தான் இன்னொரு வகையில் வேறுபட்டுள்ளது. எல்லோருமே இயல்பில் கடவுள்கள் தான். ஆனால் முடிச்சுப்போட்டுக் கொண்டு சிக்கலில் மாட்டிக்கொண்டு அடிமைப்பட்டுப்போய் விடுவார்கள்.

"நாம் எல்லோரும் அடிப்படையில் புத்தர்கள் தான். ஆனால் தனிமைப்பட்டுப்போய் தனித்தனி உலகங்களைச் சிருஷ்டித்துக்கொண்டு அதில் சிக்கி தனிமைப்படுகிறோம் இந்த முடிச்சுக்கள் போல! இதைத்தான் நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்பினேன்" என்றார்.

சிறிது நேரம் கழித்து அடுத்த கேள்வியைக் கேட்டார். "இந்த முடிச்சுக்களை அவிழ்க்கவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?" என்றார். இன்னொரு சீடன் எழுந்து நின்றான். "குருவே அதை அவிழ்க்கவேண்டுமானால் நான் அருகில் வர அனுமதிக்கவேண்டும். முடிச்சுக்கள் எப்படி போடப்பட்டிருக்கிறது என்று தெரியாத வரையில் அதை அவிழ்க்கவழியில்லை. முடிச்சுப் போட்ட முறை தெரிந்தால் அதை அவிழ்ப்பது சுலபம். நெருங்கிப்பார்க்காமல் எதுவும் செய்ய முடியாது. நினைவோடு செய்தால் முடிச்சுக்கள் எளிமையாக விழும். நினைவில்லாமல் விழும் முடிச்சுக்கள் மிகவும் சிக்கலானவை. சில சமயம் அவிழ்க்க முடியாமல் போய்விடும்" என்றான். புத்தர் நிமிர்ந்து பார்த்தார். "நீ கூறுவது சரிதான். அதுதான் வாழ்க்கை . அதுதான் வாழ்க்கையின் சிக்கல் " என்றார்.

இதன் விளக்கம் என்வென்றால் கணியன் பூங்குன்றனார் சொன்னாரே "தீதும் நன்றும் பிறர் தரவாரா" என்று அது தான். நமது சிக்கல்களுக்கு நாம்தான் காரணம். நம்மை அறியாமல் விழிப்புணர்ச்சி இல்லாமல் நாம் போட்டுக் கொள்ளும் முடிச்சுக்களில் சிக்கி, சிக்கலை அவிழ்க்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறோம். இதுதான் இன்று நடந்துகொண்டிருக்கிறது. எப்போது தான் நாம் விழித்துக் கொள்ளப் போகிறோமோ தெரியவில்லை.

நமது ஆள் ஒருவன் சொன்னான் "எதிர்வீட்டுக்காரனால் எனக்கு எப்போதும் சிக்கல் தான் சார் " என்றார். "ஏன் அப்படி சொல்கிறாய்?" என்றேன். "எப்போது பார்த்தாலும் நூறு ரூபா கொடு. நூறு ரூபா கொடு என்று என்னை பாடாய்ப் படுத்துகிறான் சார்" என்றான். "நீ இல்லை என்று கூற வேண்டியது தானே!" என்றேன் நான். "அது எப்படி வாங்கிய கடனை இல்லை என்று கூற முடியும்? " என்கிறான் அவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வேட்பாளர்கள் மீதான தாக்குதலுக்கு ஜனாதிபதி கண்டனம் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மௌனகுருசாமி, ஈ.பி.டி.பியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஆகியோர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் குறித்து தாம் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இத்தகைய சம்பவங்களின் காரணமாக நாட்டில் தேர்தலை நீதியான அடிப்படையிலும், நேர்மையாகவும் நடத்தமுடியாதிருக்கின்றது.

அத்துடன் இதனால் வேட்பாளர்கள் சுதந்திரமாக தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள அஞ்சுகின்றனர் என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இத்தகைய சம்பவங்களை தாம் வன்மையாக் கண்டிப்பதாகத் தெரிவித்தார். (60,10)

# நாட்டில் சகஜ நிலைதொடர நீதியும் சட்டமும் மிகவும் அவசியம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சகஜ நிலை தொடருவதற்கு நீதிச் சேவையும் சட்ட சேவையும் மிக முக்கியமானதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சட்டத்தரணிகள் சங்கத்தின் 30 ஆவது வருடாந்தக் கூட்டம் நேறறு முன்தினம் கொழும்பில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு பேசிய ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

ஒரு ஜனநாயக நாடு என்ற வகையில், இலங்கை ஆயிரக்கணக்கான வருட வரலாற்றைக் கொண்டுள்ளது. அத்துடன் எங்கள் பாரம்பரியம் பௌத்த மதக் கோட்பாட்டை அடிப்படையாக கொண்டது.

ஆனால் இலங்கைக்கு வந்த டச்சு ஆட்சியாளர்களின் வருகையினால் நவீன மேற்குலக நடைமுறைகள் சில அமுல்படுத்தப்பட்டதாக சுட்டிககாட்டிய ஜனாதிபதி நாட்டில் சட்டத்தையும் நீதியையும் நிலை நாட்டி மக்களின் அடிப்படை உரிமைகளை உத்தரவாதஞ் செய்வதற்கு நீதிச் சேவையும், சட்டத் தொழிலும் பொறுப்பாக இருந்தது என்றார்.

கடந்த 3ஃதசாப்த காலங்களாக சட்டத்தையும், நீதியையும் நிலை நாட்டுவதற்கு நீதிச் சேவையாளர்களும் சட்டவல்லுநர்களும் ஆற்றிய பணியையும் பாராட்டிப் பேசினார். (60,10)

# தேர்தலைக் குழப்புவதற்கு ஐ.தே.மு. கடும்பிரயத்தனம்

## தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

சுதந்திரமான தேர்தல் ஒன்று நடாத்தப்படுவதைக் குளப்பும் வகையில் செயற்படுவதற்குத் ஐக்கிய தேசிய முன்னணி தயாராகிவருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

இராணுவச் சீருடை அணிந்தவர்களைப் படையினரின் வீடுகளுக்கு அனுப்பி "போர் மூளப் போகிறது. உங்கள் பிள்ளைகளை இழக்கப்போகிறீர்களா? " என்பது போன்று பயம் காட்டுவது, பிக்கு முன்னணி வேட்பாளர்களைத் தாக்கிவிட்டு அதற்கான பழியை ஜே.வி.பி. மீது போடுவது, பிரதமர் ரணில் மீது வன்முறை பிரயோகிப்பது போன்ற ஒரு சம்பவத்தை மேடையேற்றி அனுதாபம் பெறுவது தனிப்பட்டவர்களையோ அல்லது புலி உறுப்பினர்களையோ சீருடையுடன் தோன்றிக் கலவரம் புரியச் செய்வது போன்ற உபாயங்களைக் கையாள ஐக்கியதேசிய முன்னணியினர் ஆயத்தமாகி வருவதாக தமக்கு இரகசியத் தகவல்கள் கிடைத்திருப்பதாக பிரேமஜயந்த தேர்தல் ஆணையாளருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

பிக்கு முன்னணியின் செயலாளர் வண.உடுவே தம்மாலோக தேரர் தன்மீது ஜே.வி.பி.யினர் கொலை முயற்சிஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு மற்றும் அண்மையில் இராணுவச் சீருடை துணிவகை பெருமளவில் கடத்தப்பட்டமை, சீருடைகள் தைக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டமை போன்ற தகவல்களைக் கண்டிப்புடன் கவனத்தில் எடுக்குமாறும் மேலும் கேட்கப்பட்டுள்ளதுடன், இவற்றைக் கவனத்தில் கொண்டு படையினரையும் பொலிஸாரையும் பணிகளில் அதிகம் ஈடுபடுத்துமாறும் தேர்தல் ஆணையாளரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. (06)

## இராசிபலன்

29. 03. 2004

(பங்குனி16, திங்கட்கிழமை)

| | |
|---|---|
| அட்டமி | பிற்பகல் 4.40 மணி வரை |
| திருவாதிரை | பிற்பகல் 2.12 மணிவரை |
| இராகுகாலம் | 7.43-9.13 மணிவரை |
| சுபநேரம் | 12.13-1.43 மணிவரை |

*மூன்றாவது பங்குனித் திங்கள்*

**மேடம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, சகோதரர் உதவி, கீர்த்தி.

**இடபம்**
கடுமையான வார்த்தை, காரிய தடங்கல், பொருள் விரயம், திடீர் நன்மை.

**மிதுனம்**
கற்பனை மிகுதி, பெரியோர் சந்திப்பு, பிரயாணம், தேகநலன்.

**கடகம்**
இடமாற்றம், வாக்கு மேன்மை, சயன சுகக் குறைவு, பித்த ரோகம்.

**சிங்கம**
இஷ்ட சித்தி, கீர்த்தி, போசன சுகம், செய் தொழில் விருத்தி.

**கன்னி**
அதிகாரம், நல்லசெய்தி, உறவினர் சந்திப்பு, காரிய நன்மை.

**துலாம்**
அதிக பிரயாசை, தேகாந்திர வாசம், எதிர் பாராத செலவு, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
பிரயாண பயம், அமைதிக்குறைவு, உறவினர் வெறுப்பு, உடல்நலக் குறைவு.

**தனுசு**
காரிய சித்தி, அபூர்வ சந்திப்பு, விருந்துபசாரம், பிரயாணம்.

**மகரம்**
மனமகிழ்ச்சி, புதிய சிந்தை, பெரியோர் ஆதரவு, போசன சுகம்.

**கும்பம்**
கௌரவக்குறைவு, காரிய தாமதம், ரோக நிலை, திடீர் நன்மை.

**மீனம்**
காரிய தாமதம், புதிய விடயம், ரோக நிலை, மனச்சஞ்சலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## வாக்களிப்பு நடைமுறைகள் குறித்து வாக்காளருக்கு விளக்கம்

(மட்டக்களப்பு)

இம்முறை பொதுத்தேர்தலில் வாக்களிக்கச் செல்லும் வாக்காளர்கள் எவரும் பொருட்களையோ அன்றி பிள்ளைகளையோ எடுத்துச் செல்லக் கூடாது. என மட்டக்களப்பு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் இ. மோனகுருசாமி அறிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் வாக்களிப்பு நடைமுறைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது விடயம் குறித்து இ.மோனகுருசாமி மேலும் கருத்துத்தெரிவிக்கையில், வாக்காளர்கள் வாக் களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் போது தமது உடமைகளையே அன்றி சிறுபிள்ளைகளையே எடுத்துச்செல்லக்கூடாது என்ற நடைமுறை பாதுகாப்பு முன்னேற்பாட்டு காரணம் கருதியே இந் நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது.

வாக்காளர்கள் தமது வாக்காளர் அட்டை மற்றும் அடையாள அட்டைகளையே எடுத்துச் செல்ல வேண்டும். கொண்டு செல்லப்படும் ஏனைய உடமைகள் வாக்களிப்பு நிலையத்திற்கு அருகாமையில் உள்ள நிலையங்களில் பத்திரப்படுத்தப்படும். இவர்கள் மீது இராணுவச் சோதனைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது எனக் குறிப்பிட்டார். (உ-61,18)

## கொழும்பு நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வா தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும் சம்பவங்கள் அதிகாரித்து வருவதைச் சுட்டிக்காட்டிய பொலிஸ்மா அதிபர், இதனை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது என்றும், கொழும்பில் நேற்று முன்தினம் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகத்தில் காயமடைந்த முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் , மட்டக் களப்பு மாவட்ட அரச அதிபர் மௌன குருசாமி மற்றும் ஈ.பி.டி.பி. வேட்பாளர் ஆகியோருக்கு தீவிர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளதுடன், இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பான உயர்மட்ட விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (61,10)

# முரண்படும் கருணாவிந்து முறுக்கேற்றும் ஊடகங்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குக் கருணா என்கின்ற தமிழனின் திடீர்ச் செயல்கள், ஒட்டு மொத்தத் தமிழ் நெஞ்சங்களையும் பதறச் செய்துதான் விட்டது! அதிலும், குறிப்பாகப் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் பட்ட வேதனை அளப்பரியது. பல்லாயிரக்கணக்கான மைல் தொலைவிற்கு அப்பால், தாய் மண்ணைத் தம் உடலால் மட்டும் பிரிந்து வாழுகின்ற இந்த உள்ளங்கள் உள்



வாங்கிய சோகத்தைச் சொல்லில் வடிப்பதும் எளிது அல்ல!

இந்த நெருக்கடி தோன்றியுள்ள காலகட்டத்தில், எம்மவரில் பெரும்பான்மையோரின் எண்ணத்தில் எழுகின்ற கேள்விகளும் ஒரே விடயத்தைச் சுற்றியே அமைவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. எப்போது இந்த நெருக்கடி நிலை தீரும்? இந்த முரண்பாட்டுச் செயல எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வரப்படும்? எப்போது எமது நெஞ்சங்களில் பால்வார்க்கும் செய்தி வரும்? என்பன போன்ற கேள்விகளே கரிசனை கொண்ட நெஞ் சங்களில் எழுந்த வண்ணம் உள்ளன.

## கண்கட்டுவித்தை

நாட்டுப்பற்றுள்ள எந்த உள்ளங்களிலும், இயல்பாக எழக்கூடிய எண்ணங்கள் தாம் இவை! ஆனால், இங்கே முக்கியமான, மிக முக்கியமான ஒரு விடயத்தைச் சுட்டிக காட்ட வேண்டிய கடமை எமக்குண்டு. தமிழீழ மக்களின் தார்மீகச சிந்தனைகளை, இந்தப் புதிய நெருக்கடியில் மட்டுமே குவித்து வைபபதற்கான முயற்சிகளைத் தான், சில தீய சக்திகள் முனைப்புடன் செய்து வருகின்றன. அதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளன என்பதும் வேதனையான உண்மை தான்; இது ஒரு கண்கட்டு வித்தை!

இந்தக் கண்கட்டு வித்தை குறித்துச் சற்று விரிவாகவும் விளக்கமாகவும் தர்க்கிப்பது, இந்த வேளையில் முக்கியமானதொன்றாகவே நாம கருதுகின்றோம். கருணா இன்றைய தினம் பேசுகிற விடயங்கள் குறித்தும், காட்டுகின்ற காட்சிகள் குறித்தும் சில ஊடகங்கள் ஊதிப் பெருப்பித்து உற்சாகமாகச் செய்தி வெளியிட்டு வருகின்றன. சிங்களப் பேரினவாத ஊடகங்களும் சில தமிழ் ஊடகங்களும். இதில் பெரும் பங்கின்ன வகிககின்றன. கருணாவின் காரணமாக எழுந்துள்ள இந்தத் தற்காலிக நெருக்கடி குறித்துப் பூதாகரமான செய்திகளை வெளியிட்டு வரும் இந்த விரோத சக்திகளின் ஆழ் மனத்து ஆசைதான் என்ன?

## பிரதேசவாதப் பிரசாரம்

தன்னுடைய தனிப்பட்ட நலனுக்காக விளைநதிட்ட தவறுகளை நியாயப்படுத்துவதற்காகவும் பிரதேசவாதத்தை முன்னிறுத்தி, இன்று முன்னிற்குப்பின் முரணாகப் பேசியும் செயல்பட்டும் வருகின்ற கருணா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரான வலிமையான சக்தியாக எதிர்காலத்தில் உருவெடுககக் கூடும என்று, இந்த விரோத சக்திகள் நம்புகின்றனவா?

ஈழத் தமிழினமும் புலம்பெயர்ந்த தமிழினமும் இந்தக் கருணாவின் கீழ் அணிவகுத்து ஆதரவு நல்கும் என இந்த விரோத சக்திகள் எண்ணுகின்றனவா?

இராணுவப் படைப்பலம் ரீதியாகக கருணா தமிழ் மக்கள் சக்திக்கு எதிராகத் தனித்து நிற்க முடியும் என்று இந்தச் சக்திகள் சிந்தித்துச் செயல்படுகின்றனவா?

## ஊடகங்களின் விஷமப் பிரசாரம்

இன்றைய காலகட்டத்தில், கருணாவின் செயல்களையும், பேச்சுக்களையும் சில ஊடகங்கள் பூதாகரமாக்கிக் காட்டுவதன் மூலம், எதிாகாலத்தில் கருணா என்கின்ற இந்தத் தமிழன், தமிழீழத்தை இராணுவ ரீதியாகவும் பிரதேச ரீதியாக வுங் கூறுபோட்டுவிட முடியும் என்று சில சக்திகள் மனப்பால் குடிக்கின்றன.

இப்படிப்பட்ட விஷமப் பிரசாரம் காரணமாக, உலக நாடுகள் யாவும் திரண்டு எழுந்து, கருணாவுக்கு ஆதரவாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராகவும் குரல் கொடுக்கும் என்று இச் சக்திகள் நம்புகின்றன. இதனடிப்படையிலேயே இவ் ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றன.

## தமிழ்த் தேசியத்துக்கானகுறி

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கக கூடிய எந்த சிங்களப் பேரினவாதக கட்சியும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் புறந்தள்ளி, கருணாவோடு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் என்று இந்தத் தமிழ் விரோத சக்திகள் உண்மையாகவே எண்ணுவது போன்று தென்படுகின்றது.

சிந்தித்துப்பார்த்தால் அதுவும் ஆறஅமர இருந்து சிந்தித்துப்பார்த்தால், இந்தத் தமிழ் விரோதச் சக்திகளின் உண்மையான குறிக்கோள எதுவென்று புரியக்கூடியதாக இருச் கும்!

கருணா என்கின்ற தமிழனின் சுயநலத்தின் பின்னே ஒளிந்து கொண்டு, இந்தத் தமிழ் விரோதச் சக்திகள் எய்கின்ற அம்புகள் எதனை நோக்கிப் பாய்கின்றன என்ற உண்மையை அப்போதுதான் தெளிவாகப் புரியக்கூடியதாக இருக்கும்!

இந்த அம்புகள் தமிழ்த் தேசியத்தை நோக்கிக் குறிவைக்கப்பட்டு, ஏவப்படுகின்றன. தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை குறி வைத்து ஏவப்படுகின்றன. தமிழ மக்களின் அபிலாஷைகளுக்கு, வேட்கைக்கு எதிராகவே இந்த அம்புகள் ஏவப்படுகின்றன.

## தேசியத் தலைவரின் குறிக்கோள்

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை. பிரபாகரன், தன்னுடைய தன்னலமற்ற தியாகப் போராட்ட வரலாற்றில் வலியுறுத்தி, வழிகாட்டி வந்துள்ள தமிழீழத் தேசியம் குறித்து இவ் வேளையில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

பாரம்பரிய தாயக பூமியையும், தனித்துவமான மொழியையும், பண்பாட்டையும் கொண்டுள்ள எமது மக்கள் ஒரே தேசிய இனத்தவர்கள். இந்தத் தேசிய இனத்தவர்கள் தமது அரசியல் பொருளாதார வாழ்வைத் தாமே தீர்மானிக்கும் உரிமை கொண்டவர்கள். அந்த உரிமைக் கோட்பாடுதான் சுயநிர்ணய உரிமையாகும். தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாகத் தாம்வாழ்ந்து வந்த பாரம்பரிய மண்ணில், அந்நிய சக்திகளின் தலையீடு மற்றும் ஆதிக்கம் இன்றிச் சுதந்திரமாக, கௌரவமாக வாழ விரும்புகிறார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டை பேணித் தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது அடையாளத்தைப் பாதுகாத்து வாழ விருமபுகின்றார்கள். தமது தாயக மண்ணில் தம்மைத்தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகின்றார்கள். இதுவே எமது மக்களின் அபிலாஷை வேட்கை எனத் தேசியத் தலைவர் கூறினார்.

அத்துடன், அவற்றைக் கட்டிக் காத்து வந்துள்ள தமிழ்த் தேசியத்திற்கு எதிராக வைக்கப்படும் இந்த துரோகச் சிந்தனைகளுக்கு நாம் இடங்கொடுக்காத வகையில் எமது சிந்தனைகளை ஒருங்கிணைக்க வேண்டிய வேளை தற்போது உருவாகியுள்ளது. இன்று கருணாவை முன்வைத்துக் கொண்டு அவருடைய பிரதேசவாதத்தின் ஊடாக, தமிழ்த் தேசியத்திற்கெதிரான செயறபாடுகளை, இத்தீய சக்திகள் மேறகொண்டு வருகின்றன. விரைவில் முடியப்போகும் இந்தக் கருணாவின கண்கட்டுவித்தையைப் பார்த்த எம்மவர் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கையில், தமிழ் விரோத சக்திகளோ சத்தமில்லாமல் கொள்கை ஊடுருவல்களைச் செய்ய ஆரம்பித்துள்ளன.

## தமிழரின் விடுதலைப் போராட்டம்

தமிழீழ விடுதலைப்போராட்டம் என்பது ஓர் ஆயுதப் போராட்டம் மட்டும் அல்ல. ஒரு இனவாதப் போரின் அடக்குமுறைக்கு எதிராக தமிழர் முகங்கொடுத்து போராடி வந்துள்ள அதே வேளையில், தனது இனத்துக்குள்ளே புரையோடிப் போயிருந்த சாதிக்கொடுமைக்குச் சாவு மணி அடிக்கும் செயற்பாட்டையும் தமிழ்த தேசியத்தலைமை வெற்றிகரமாகச செய்து வந்துள்ளது. இன்று உலகமே மத ரீதியாகப் பிரிந்து நின்று, மத வெறிகொண்டு வன்முறையில் ஈடுபடுகையில், தமிழ்த் தேசியத் தலைமையோ மத வேறுபாடற்ற நிலைப்பாட்டின் ஊடாக, தனது போராட்டத்தை நகர்த்திச் சென்றுள்ளது.

தமிழீழத் தேசிய நலன் என்பது, பரந்துபட்ட அளவில் விரிந்து செயறபட்டு வருகின்றது என்பதே உண்மையாகும். சாதி, மத, வர்க்க, பிரதேச வேறுபாடுகள் எதும் இன்றி, தமிழீழத் தேசிய விடுதலைக்கான போராட்டத்தைக் கொண்டு செல்வதற்காகத் தேசியத் தலைவர் எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்? என்பதை இந்த வேளையில் எண்ணிப்பார்த்து வியக கின்றோம், அதுமட்டுமா? பெண்ணின அடிமைத்தனத்தை உடைப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளையும் மறக்கத்தான் முடியுமா? சீதனப பிரச்சினை என்பது பெண்களுக்கு எதிரான சமூக ஒடுக்குமுறையின் ஒரு வெளிப்பாடு என்ற காரணத்தால், மணக்கொடைத் தடைச் சட்டத்தை தமிழீழத்தில் அமுலாககியமை ஒரு முன்மாதிரியான சட்ட விதியல்லவா? ஒரு சமூகத் தின், சமூக - பொருளாதார அடிப்படைகளையும் புரிந்துகொண்டு, அதேசமயம் பெண்ணினததிற்கு எதிராக விளங்கிய சமூக மரபுகளுக்குச் சாவு மணி அடிக்கும் வகையில் மரபுச் சட்டம் தமிழீழத்தில் திருத்தி அமைககப்பட்டது சரித்திரத்தில் இடம் பெறக்கூடிய ஒரு விடயமாகும்.

ஆகவே, தமிழ்த் தேசிய விடுதலைக்கான போராட்டம் என்பது, மண் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் மட்டுமல்ல! சாதி ஒடுக்குமுறை, மதவேறுபாடு, பிரதேசவாதம், வர்க்க வேறுபாடு போன்ற குறைபாடுகள் அற்ற தேசியத்தைக் கட்டி எழுப்புவதும் விடுதலைப் போராட்டத்திற்கு அவசியமாகின்றது.

## தமிழனின் தனித்துவம்

இந்தத் தர்க்கத்தை இன்னொரு வகையாலும் சிந்தித்துப் பார்க்கலாம். ஈழத்தமிழன் மீது, சிறீலங்கா அரச பயங்கரவாதம் திணிக்கப்பட்டதன் காரணம் அவன் யாழ்ப்பாணத் தமிழன், மட்டக்களப்புத் தமிழன் என்பதாலோ அல்லது அவன் மன்னார் - வன்னித் தமிழன் என்பதாலோ அல்ல! அவன் தமிழன் என்பதால் மட்டுமே அவன் மீது சிறீலங்கா அரச பயங்கரவாதங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. தமிழன் தமிழனாக வாழ்வதாலும், அவன் பேசுவது தமிழ் மொழியாக இருப்பதனாலும், அவனுககு மதங்களைக் கடந்த தனித்துவமான பண்பாடும் - நாகரிகமும் இருப்பதாலும், அவனுக்கென்று ஒரு பாரம்பரிய பூமி வாழ்விடமாக இருப்பதாலும், அவனுடைய இனம் ஒரு தேசிய இனமாக இருப்பதனாலும், அவனை-அந்தத் தமிழனை- அவனது மொழியை - அவனது பண்பாட்டை -அவனது நாகரிகத்தை - அவனது பாரம்பரியமண்ணை, அவனது இனத்தை ஒழிப்பதற்காகவும் , அழிப்பதற்காகவும் தமிழ்த தேசிய விரோத சக்திகள் எப்



போதும் முயன்றே வந்துள்ளன.

ஆக்கிரமிப்புப் போரில் அவரை வெல்ல முடியாத தமிழ் விரோத சக்திகள், இன்று தமிழ்த் தேசியத்தின் மீது குறிவைத்துள்ளன. கருணா என்கின்ற கண்கட்டு வித்தை நடைபெறுகின்ற இந்த வேளையில், தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டை அசைத்துப் பார்க்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கருணாவின் முரண்பாடு விரைவில் முடிந்துவிடும். கூத்தைப் பார்க்கும் வேளையில், கூரையைப் பிரிக்க முனையும் திருடர்களுக்கு இடங்கொடுக்கும் நேரமல்ல இது! கருணா ஏற்படுத்திய இந்த நெருக்கடி விரைவில் தீர்க்கப்பட்டுவிடும் அலலது தீர்ந்துவிடும். இந்த வேளையில் நாம் கரிசனை கொள்வதற்கு வேறு முக்கிய விடயங்கள் உள்ளன.

## புலம்பெயர் தமிழரின் கடமை

எமது மக்களின் அபிலாஷைகள் மற்றும் வேட்கைகளான ‘தாயகம் - தேசியம் - தன்னாட்சி -சுயநிரணய உரிமை’ என்பன அங்கீகரிக்கப்பட வேண்டியதற்கான செயற்பாடுகளில் புலம்பெயர்ந்த தமிழீழத்தவர்களாகிய நாம் இறங்க வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்மீது தடை விதித்திருக்கும் சில நாடுகள், அத தடையை நீக்க வேண்டியதற்கான கோரிக்கைகள் வலுவாக முன்வைகக்கப்பட வேண்டும். புலம் பெயர்ந்து வாழுகின்ற தமிழர்களும் அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சங்கங்களும், கழகங்களும், கூட்டமைப்புக்களும் இந்த முக்கிய செயற்பாடுகளை தனியாகவும், கூட்டாகவும் மேற்கொள்ள வேண்டும் என்று இவ்வேளையில் உரிமையோடு கேட்டுக்கொள்கிறோம்.□

அவுஸ்திரேலியாவிலிருந்து
சபேசன்

# வடக்கு-கிழக்கைப் பிரிப்பதன் மூலமே நாட்டைப் பாதுகாக்க முடியும்

## சோமவன்ச அமரசிங்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வடக்கும் கிழக்கும் பிரிக்கப்படுவதன் மூலமே நாட்டைப் பாதுகாக்க முடியுமென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கததின் கொள்கைப் பிரகடன வெளியீட்டு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே சோமவன்ச அமரசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதிக்குப் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்தர முன்னணியே ஆட்சி அமைககும். அதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால், இக் கூட்டமைப்புக்குள்ளும் சில சிக்கல்கள், வேறுபாடுகள் இருக்கத்தான், செய்கின்றன. எமது கூட்டமைப்புக்குள் சிக்கல்கள் இருந்தாலும், பிரதான நோக்கம் ஒன்றென்பதால் ஏனைய பரச்சினைகள், முரண்பாடுகளைத் தோற்றுவிக்காது.

காலியிலிருந்து கொழும்பு நோக்கிய ஜே.வி.பியின் பாதயாத்திரை பெரும் உத்வேகத்தை மக்கள் மத்தியில் உருவாக்கியதோடு தேசப்பற்றையும் ஏற்படுத்தியுள்ளது. ஜே.வி.பி. தனது வரலாற்றில் பல்வேறு தியாகங்களைச் செய்துதான இன்றைய உயர் நிலைக்கு வந்தது. தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் உந்துதலும், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வேகமாக முன்னெடுத்த பிரிவினையை தடுத்து நிறுத்த உதவியது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இன்று முன்வைத்துள்ள நாட்டைக்காக்கும் திட்டங்களை முழு மனதோடு ஏற்றுக்கொள்கிறோம். அதனை வழிநடத்துவோம்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் பிரிக்கபபட வேண்டும். இணைக்கப்படக கூடாது என்பதுதான் எமது நிலைப்பாடு. அதனை நாம கூறிவந்தோம். ஆனால் ஒருவரும் அதனை ஏற்று செயற்படவில்லை. ஆயினும் வடக்கு-கிழக்கு பிரிக்கப்படவேண்டும் என்ற கருத்துக்கள் தற்போது முன் வைக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டார் (18)

# தமிழினத்தின் தேசிய எழுச்சியை தேர்தலூடாக பறை சாற்றுவோம்

## அரசியல் பள்ளிப் பொறுப்பாளர் அரசண்ணா

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் தேசிய எழுசசியை ஜனநாயக வழியில் உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்கு இத் தேர்தலை நாம் பயன்படுத்த வேண்டும். தமிழ் மக்கள் ஒட்டு மொத்தமான எமது தேசிய எழுச்ச'யை உலகிற்கு உணர்த்த வேணடும்.**

இவ்வாறு விடுதலைப்புலிகளின அரசயல்துறை பள்ளிப் பொறுபபாளர் அரசண்ணா பருத்தித்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாறறும் போது தெரிவித்துள்ளார்.

தமிழ் இனத்தின் அபிலாஷைகளை நிறைவேற்ற தீர்மானம் எடுக்கவேண்டிய இக்கால கட்டத்தில் தமிழ் மக்களின் ஒற்றுமையை இத்தேர்தல்காட்ட வேணடும்.

தமிழினம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த போது மக்களும் முழுமையாக விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டார்கள். புள்ளடியிடுவதில எமக்கு நம்பிக்கை இல்லாத போதும் புள்ளடிபோட்டு தன்னாட்சி சுயநீர்ணய உரிமையுடன் கூடிய தேசிய தன்மையை உலகுக்கு வெளிக்காட்டி அது பற்றிப் பேசுவதற்கு நாம் தற்பொழுது தயாராகி நிற்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்காக தமிழ் தலைவர்கள் அகிம்சை வழியில் ஜனநாயக முறையில் போராடிய போது இலங்கை அரசு ஆயுத கலாசாரத்தின் மூலம் பதிலடி கொடுத்து அடக்க முற்பட்டது. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர், 1961 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் உரிமைக்காக தமிழ்த் தலைவர்கள் சத்தியாக் கிரகம் நடத்திய போது ஆயுத முனையில் அடக்கப்பட்டார்கள். 1977 இல் பொதுத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் சார்பாக எதிர்க்கட்சித் தலைமையைக் கைப்பற்றிய போது இன மோதல் கட்டவிழ்த்து விடப்பட்டு தமிழ் மக்களின் உயிர்களும் சொத்துக்களும் அழிக்கப்பட்டன. இதனை அடுத்தே ஆயுதப் போராட்டம் கூர்மையடைந்து பல வெற்றிகளை ஈட்டியது.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் எமக்கென்று ஒரு படை, நிலம், நிர்வாகக் கட்டமைப்பு, கலை; பண்பாடு, மொழி என்பன உண்டு என்பதை சர்வதேசத்துக்கு வெளிக்காட்டினோம். தொடர்ந்து 2001 இல் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வின் மூலம், தமிழ் மக்கள் தமிழ் தேசியத்தின் எழுச்சியை வெளி உலகிற்கு காட்டினார்கள்.

ஜனாதிபதி பொதுத் தேர்தலை அறிவித்துள்ள இந்த நிலையில், மீண்டும் ஜனநாயக வழியில் தமிழ் தேசியத்தின் எழுச்சியைக் காண்பிப்பதற்கு ஒரு சநதர்ப்பம் கிடைத்துள்ளமையினால்.எமது தலைமையை ஏற்றுத தேர்தலில் போட்டியிடும் கூடடமைப்பினரை விடுதலைப் புலிகள் ஆதரித்து நிற்கின்றார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்த போது அரசியல் நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் வந்த போராளிகளிடம் நீங்கள் உறுதியுடன் நிராயுத பாணிகளாகச் செல்லுங்கள் உங்களுக்கு கவசமாக மக்கள இருந்து காப்பாற்றுவார்கள் என எமது தலைவர் அவர்களுக்குக கூறினார்.

அதேபோல அரசியல்துறையைச் சேர்ந்த பல போராளிகளை மக்கள் கவசமாக இருந்து காப்பாற்றியுள்ளார்கள். எனவே எச்சந்தர்ப்பத்திலும் மக்கள் அவ்வாறு நடந்து கொள்வார்கள் என்று எமது தலைவர் நம்பிக்கை கொண்டுள்ளரர்.

எனவே பொதுத் தேர்தலில் ஒட்டு மொத்தமாக மக்கள் அனைவரும் தமது ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கித் தமிழ்த் தேசியத்தின் குரலை பாராளுமன்றத்தில் ஒலிக்கச் செய்யவேண்டும். புலிகள் இயக்கம் மக்கள் பலத்தையே நம்பியுள்ளது, இவ்வாறு அரசியல் துறைப் பள்ளிப் பொறுப்பாளர் அரசண்ணா கூறினார். (4,45,35,52)

# ஆட்சியமைப்பது யாரென்பதை நாமே தீர்மானிக்க முடியும்

## சுரேஷ் பிறேமச்சந்திரன் உரை

(தம்பசிட்டி)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று யார் ஆட்சியமைப்பது என்ப



தைத் தீர்மானிப்பது தமிழ்தேசியக் கூட்டமைப்புத் தான் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளரான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன் கிழமை நல்லூர் சங்கிலியன் அரங்கில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டததில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

இந்தத் தேர்தலானது தமிழருக்கு ஒரு புது வருடமாக அமைய வேண்டும். கடந்த 20 வருடகாலமாக இடம்பெற்ற யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள் தான். தற்போது நிலவும் யுத்த நிறுத்தத்தின் மூலம் தமிழர் கள் மூச்சுவிடக் கூடிய நிலை தான் ஏற்பட்டுள்ளது. ஆனால் அந்நிலைமை முற்று முழுதானதல்ல..

தமிழருக்கு என ஒரு தனி நிலம இருக்கிறது, மொழி இருக்கின்றது, படை இருக்கின்றது, நீதித்துறை இருக்கின்றது இத்தனையும் இருந்தும் தமிழர்கள் தமது சொந்தக் காலில் நிற்க முடியாத ஒரு துர்ப்பாக்கிய சூழ்நிலை உள்ளது. இந்த நிலை மாற்றப்படவேண்டும்.

முக்கியமாகத் தமிழரின் உரிமைகள் மதிக்கப்படுவதுடன், தமிழர் பிரதேசத்தின் அபிவிருத்திகளிலும் கவனம் எடுக்கப்பட வேணடும். எனவே நாங்கள் தமிழரின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்துத் தான் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளோம்.

எமக்கு எதிராகச் சில தமிழ்க் கட்சிகள் செயற்படுகின்றன. ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு அரசியல் நோக்கு இருக்கலாம். ஆனால அது ஒட்டு மொத்தத் தமிழ் மக்களினதும் விடிவிற்கும் பாதகமாக இருக்கக்கூடாது. ஒவவொரு கட்சிகளுக்கும் இடையில் பிரச்சினைகள் இருக்கலாம் அவை பேசித் தீர்க்கப்படலாம்.

வடக்கும் கிழக்கும் இணைகக்கப்பட்ட ஓர் பிரதேசமாகும். இது எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியம். வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கு தமிழ் மக்கள் ஒருவருமே அனுமதிக்கமாட்டார்கள். இதனைக் கருணாவும் புரிந்து கொள்ளவேண்டும் எமது இந்தத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெறும நாலு கட்சிகளால் இணைக்கப்பட்டது அல்ல.

ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு வெளிநாட்டு உதவிகள் இல்லாமல் ஆட்சி அமைக்க முடியாது. 7 ஆயிரத்து 500 கோடி ரூபா நிதி கடந்த கால யுத்தத்திற்காக செலவிடப்பட்டிருக்கின்றது. ஆனால் அந் நிதியின் மூலம் பல ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்திருக்கலாம் அல்லது பல அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தி இருக்கலாம்.

ஆனால் இந் நிதியை எந்தவொரு வருமானமும் இன்றி, அநியாயமாக அரசினால் செலவிடப் பட்டிருக்கின்றது. எனவே இந்நிலைமை மாற்றப்பட வேண்டும்.

எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெற்றுத் தொங்கு பாராளுமன்றம் ஒனறை அமைப்பதற்கு ஆட்சியமைப்பது யார்? யார்என்பதைத் தீர்மானிப்பதற்கும் எம்மால்தான் முடியும். தமிழ் மக்களுக்கு நல்லதோர் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு எனக் குறிப்பிட்டார். (45)

# வல்லாதிக்கத்திற்கு விலை போவது எம் இனத்திற்கு ஒரு சாபக்கேடு

(யாழ்ப்பாணம்)

வல்லாதிக்கச் சக்திகளுக்கு வல்லை போகின்ற தன்மை இன்னமும் பல தமிழ்த் தலைவர்களிடம் குடிகொண்டுள்ளது. இது தமிழ் மக்களாகிய எமக்கு ஒரு சாபக் கேடானது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப பட்டியல் வேட்பாளரான மா.க.ஈழ வேந்தன் தெரிவித்துள்ளார்.

ஈழவேந்தன் மேலும் தெரிவித்திருப்பதாவது,

என்னைப் பொறுத்தளவில் கொணட கொள்ளைகளில் இருந்து வழுவுகின்ற தன்மை என்னிடத்தில் இல்லை. இன்று வரை உறு தியான கொள்கையுடனேயேதான் இருக்கிறேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருகோணமலை வேட்பாளர் இரா.சம்பந்தனைப் பேல் கொள்கையில் ஈடாடுகின்ற தன்மை படைததவன் அல்ல நான். எனினும் சம்பந்தன் இப்பொழுது நல்லராக மாறி வருகின்றார். இதனால் நான் அவருடன் ஒத்துழைக கிறேன்.

ஒரு கட்டத்தில் சம்பந்தன் என்னிடம் நீங்கள் ஒரு வேட்பாராளராக வருவதை இந்தியா விருமபவில்லை என்று இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளதாகக் கூறிய போது நான் அவரிடம் இந்தியாவா ஈழத் தமிழரின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறது? என்று கேட்டேன். அவர் புண்முறுவல் பூததாரே ஒழிய பதில் எதுவும் கூறவில்லை என ஈழவேந்தன் தெரிவித்தார். (ம)


# தேர்தல்களம்

# பிரசாரத்துக்கு தடை விதித்தாலும் மக்களின் ஆதரவு கிடைக்கின்றது

## ஜோசப். எம்.பி. பெருமை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுதந்திரமான முறையில் தேர்தல் பிரசாரங்களைத் தான்



.மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் மக்களின் ஆதரவு தனக்குத் தொடர்ந்தும் கிடைதது வருவதாக மட்டக்களப்பு மாவடட வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டடைப்பின் வேட்பாளரான ஜோசப்பரராஜசிங்கத்தை அங்கிருந்து வெளியேறுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற கருணா கூறியிருப்பதாக வெளியான செய்திகள் குறித்து ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜோசப் பரராஜசிங்கம் இதனைத தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் இது பற்றிக் கருத்துக் கூறுகையில்,

கருணா என்னை மட்டக்களப்பில் இருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டதையடுத்து நான் கொழும்புக்கு சென்றிருப்பதாகவும், தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகியுள்ளதாகவும் சில விஷமிகளால் பொய்ப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட மக்களை திசைதிருப்பி அவர்களின் வாக்குகளைத் தாம் அபகரித்துக் கொள்வதற்கு சில அரசியல் கட்சிகள் முயற்சித்து வருகின்றன. எனவே அவர்களால் தான் இத்தகைய பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

எது எவ்வாறாயினும் மக்கள தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குப் பூரண ஆதரவு வழங்கி வருகின்றார்கள் என்றார்.(61,10)

# சைவத்திற்கும் தமிழுக்கும் புகழ் சேர்த்த பெருமை கொண்ட நல்லைக் குருமணி

ஈழநாட்டிலே நாவலர் பெருமான் தோன்றிய நல்லூரிலே சைவத் தமிழினை உலகறிய வைக்கவென திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளின் பெயராலே ஞானசம்பந்தர் ஆதீனம் 1996 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இலங்கையில் சிறப்புற விளங்கும் ஒரேயொரு ஆதீனமான நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்திற்கு காரணகர்த்தாவாக விளங்கியவர் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆவார்.

### ஆன்மீகத்தில் ஈடுபாடு மிக்கவர்

1918 ஆம் ஆண்டு வண்ணார் பண்ணையில் வசித்த சிவஸ்ரீ செல்லையாகக் குருக்கள், கனகாம்பிகை அம்மாளுக்கு மகனாகப் பிறந்த சிவசுப்பிரமணியன் வளர்ந்து வரும் காலத்திலேயே ஆன்மீகத் துறையில் ஈடுபாடு உடையவரானார். பள்ளிக் கல்வியை விட இயற்கையாகப் பெற்ற தெய்வீக ஆற்றலால் சிவயோக சுவாமிகள், சுவாமி விபுலானந்தர் போன்றோரின் அருளாசி பெற்றுக் கதாப் பிரசங்கங்கள் செய்யலானார்.

### கதாப்பிரசங்கம் செய்வதில் வல்லவர்

காசிவாசி செந்தில்நாத ஐயர், வித்துவான் கணேசையர் போன்ற சைவத் தமிழறிஞர் வழியில் வளர்ந்த இவர் செய்து வந்த கதாப பிரசங்கங்களின் சிறப்பினால் மணிபாகவதர் எனக் கௌரவிக்கப்பட்டார்.

கணீர் என்ற ஓசையும், மடை திறந்தாற் போல வரும் இன் தமிழின் நடையும், இசையும் அசைவும் சேர்ந்த ஆன்மீகக் கருத்துக்களும், சொல்லழகுடன் கூடிய கம்பீரத் தொனிசேர்ந்த கதாப் பிரசங்கமும் மணிபாகவதர்க்கே ஆண்டவனால் அருளப்பட்ட கொடையாகும். மணிபாகவதர் அவர்களுடைய கதாப்பிரசங்கத்திற்கு இன்றுவரை அவருக்கு நிகரானவர் இல்லை எனலாம்.

1966 ஆம் ஆண்டில் மதுரை திருவாவடுதுறை ஆதீனம் மணிபாகவதர் அவர்களை ஸ்ரீசுவாமி நாதத்தம்பிரான் சுவாமிகளைக் குரு அபிஷேகம் செய்து ஆன்மீகத்துறையில் வழிப்படுத்தினர். மணிபாகவதராயிருந்து இவர் ஆற்றிய சமயச் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கங்கள், ஆழ்ந்த சிந்தனைக் கருத்துக்களையும், சிரிப்பூட்டும் நகைச்சுவை அம்சங்களையும் கொண்ட தொடர் நிகழ்வுக்களாக விழாக்களிலே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### சைவத்திற்கும் தமிழுக்கும் புகழ் சேர்த்தவர்

இவர் தனது 18 வது வயதிலிருந்து இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற பல்வேறு இடங்களிலும் சுவாமிகள் ஆற்றிய கதாப்பிரசங்கங்கள் 1981 ஆம் ஆண்டுவரை பல ஆயிரமாகும். கதாப்பிரசங்கங்கள் வாயிலாகவே தமிழ் கூறு நல்லுலகம் எங்கும் சைவத்திற்கும், தமிழிற்கும் புகழ் சேர்த்த நல்லைக் குருமணியவர்கள் 1981ஆம் ஆண்டு பங்குனி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் தெய்வீகப் பேறடைந்தார்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழியிலே இன்றைய குருமகாசந்நிதானமாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் ஆன்மீகப்பணியிற் தம்மை அர்ப்பணித்து பெரும் பணியாற்றினார். 1996 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 6ஆம் நாள் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் நிறுவப்பட்டது.

நல்லைக்குருமணியின் குருபூசைத்தினமாகிய இந்நாளிலே ஈழத்துச் சைவப் பெருமக்கள் நல்லை ஆதீனத்தைப் பற்றிச் சிந்திப்பதிற் பெருமையடைவதுடன், இன்றிருக்கும் இரண்டாவது குருமகா சந்திதானமும் தொடர்ந்து ஆற்றிவரும் ஆன்மீகப் பணிகள் பெருமைமிக்கதும், மகத்தானதுமாகும்.

ஈழத்திருநாட்டிற்குப் பெருமையாய்த் திகழும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தை இன்றைய நாளிலே நல்லைக் குருமணியைப் பணிந்து போற்றிவளர்ப்போமாக

நீர்வைமணி

**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 23வது குருபூசைத் தினம் இன்றாகும். அதனையொட்டி இக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

## சிறுவிளம்பரம்


### தேவை

லொறி பொடி வேலை அனுபவம் உடையவர்கள் ஒட்டுநர்கள், ரிங்கர் மெக்கானிக் உதவியாளர்களும் கூலி ஆட்களும் தேவை. தொடர்பு:- சிவலிங்கம் மோட்டோர்ஸ் 77, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். (8471)


### மண்கும்பானில் மண் அகழ்வு தொடர்கிறது

(மண்கும்பான்)

மண்கும்பான் செட்டிகாட்டுப் பகுதியில் தொடரும் மண் அகழ்வால் நன்நீர் உவர் நீராக மாறும் அபாயம் தோன்றியுள்ளது.

அண்மைக் காலமாகத் தொடரும் இம் மண் அகழ்வால் பல பாரிய குழிகளும் பலன் தரு பனை மரங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனை நிறுத்துவதற்கு சம்பநதப்பட்டவர்கள் நடவடிக்கை எடுககவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (4,56)

### வெளியீட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் அறநெறிப் பாடசாலையினரின் 'மருதடியான் மலர் 2004' வெளியீட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் அன்னதான மண்டபத்தில் காலை 8.30 மணியளவில் சமூகஜோதி க.கணேசதாசன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

## மருதடி ஆலய உற்சவத்தை முன்னிட்டு அறநெறிப்பாடசாலை நடத்திய போட்டிகளின் பெறுபேறுகள

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை முனனிட்டு ஆலய அறநெறிப்பாடசாலையினால் நடத்தப்பட்ட போட்டிகளில் 1, 2, 3ஆம் இடங்களைப் பெற்ற போட்டியாளர்களுககுரிய பரிசளிப்புவிழா எதிர்வரும் 10 ஆம திகதி ஆலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இவ்விழாவில் பரிசில்களைப் பெறுவோர் விபரம் வருமாறு:

**மனனம்**

**ஆரம்பப் பிரிவு**
1ஆம் இடம் :- சி.பிரதீபா.
2ஆம் இடம் :- அ.பிரியங்கா.
3ஆம் இடம் :- பி.பிரதீப்.

**கீழ்ப்பிரிவு**
1ஆம் இடம் :- ந.வரலக்சுமி.
2ஆம் இடம் :- பா.சாயினி.
3ஆம் இடம் :- நா.கார்த்திகா.

**மத்திய பிரிவு**
1ஆம் இடம் :- சி.கோமளதரன்.
2ஆம் இடம் :- சி.றஜிசாயினி.
3ஆம் இடம் :- நா.கண்ணன்.

**மேற்பிரிவு**
1ஆம் இடம் :- க.அருள்மதி.
2ஆம் இடம் :- சு.ஜெயவதனி.
3ஆம் இடம் :- ம.துஷ்யந்தினி.

**பேச்சு**

**ஆரம்பப் பிரிவு**
1ஆம் இடம் :- அ.பிரியங்கா.
2ஆம் இபம் :- த. தயாளினி.
3ஆம் இடம் :- ப.சர்மிலா.

**கீழ்ப் பிரிவு**
1ஆம் இடம் :- சி.கிருத்திகா.
2ஆம் இடம் :- நா.கார்த்திகா, பா.சாயினி.
3ஆம் இடம் :- நி.கார்த்திகா.

**மத்திய பிரிவு**
1ஆம் இடம் :- இ.தாரணி.
2ஆம் இடம் :- நி.கஜானா.
3ஆம் இடம் :- இ.அனித்தா.

**பண்ணிசை**

**ஆரம்பப் பிரிவு**
1ஆம் இடம் :- ந.சுபலக்சுமி.
2ஆம் இடம் :- பி.நிஜானா.
3ஆம் இடம் :- ந.றபேசன்.

**கீழ்ப் பிரிவு**
1ஆம் இடம் :- இ.தனுசியா.
2ஆம் இடம் :- ம.ஜெனார்த்தன்.
3ஆம் இடம் :- ம.செந்தூரன்.

**மத்திய பிரிவு**
1ஆம் இடம் :- நா.பிரியதர்சினி.
2ஆம் இடம் :- சி.சகிதா.
3ஆம் இடம் :- க.தர்சினி.

**மேற்பிரிவு**
1ஆம் இடம் :- செ.ஜெனார்த்திகா.
2ஆம் இடம் :- நா.ஸ்ரீவள்ளி.
3ஆம் இடம் :- ஆ.ஜெயந்தினி, பு.டிலோஜினி.

**மாலை கட்டுதல்**

**மத்திய பிரிவு**
1ஆம் இடம் :- நா.தயாளினி.
2ஆம் இடம் :- ப.மேனகா.
3ஆம் இடம் :- க.அனித்தா, க.உஷாந்தன்.

**மேற்பிரிவு**
1ஆம் இடம் :- ம.துஷ்யந்தினி.
2ஆம் இடம் :- ஆ.ஜெயந்தினி.

**கோலம் போடுதல்**

**மத்திய பிரிவு**
1ஆம் இடம் :- ர.சங்கீதா.
2ஆம் இடம் :- நி.கஜானா, சி.ஜீவபபிரியா.
3ஆம் இடம் :- சி.கோமளதரன்.

**மேற்பிரிவு**
1ஆம் இடம் :- சு.ஜெயவதனி.
2ஆம இடம் :-க.அருள்மதி, த.தர்சினி.
3ஆம் இடம் :- நா.ஸ்ரீவள்ளி. மு.டிலோஜினி,

**கட்டுரைப்போட்டி**

**மத்திய பிரிவு**
1ஆம் இடம் :- க.அனித்தா.
2ஆம் இடம் :- இ.தாரணி.
3ஆம் இடம் :- ப.மேனகா.

**மேற்பிரிவு**
1ஆம் இடம் :- க.அருள்மதி.
2ஆம் இடம் :- த.தர்சினி.
3ஆம் இடம் :- சு.ஜெயவதனி.

**பாடப்பகுதி**

**ஆரம்பப் பிரிவு**
1ஆம் இடம் :- வி.வினோதரன், ம.அபிராமி.
2ஆம் இடம் :- உ.மயூரன்,
3ஆம் இடம் :- ப.சர்மிளா, ர.சஜீவன்,

**கீழ்ப் பிரிவு**
1ஆம் இடம் :- சி.தர்சிகா, பே.றிரோசன்.
2ஆம் இடம் :- ச.கிரிசாந.
3ஆம் இடம் :- பி.நிஜானா, பா.பாலஜீவன், இ.கவிதினி.

**மத்திய பிரிவு**
1ஆம் இடம் :- க.யஸ்மிலா.
2ஆம் இடம் :- நி.கஜானா.
3ஆம் இடம் :- க.உஷாந்தன்.

**மேற் பிரிவு**
1ஆம் இடம் க.அருள்மதி.
2ஆம் இடம் நா.ஸ்ரீவள்ளி.
3ஆம் இடம் :- சு.ஜெயவதனி. (4)

## 'தாரண' வருடப் பஞ்சாங்கம் இலவசமாகப் பெறலாம்

(கொழும்பு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் எதிர்வரும் 'தாரண' தமிழ்ப் புத்தாண்டினை முன்னிட்டு புதிய கையடக்கப் பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இப் பஞ்சாங்கத்தில் புதுவருடப் பலன், பன்னிரு மாதங்களுக்குரிய திதி, வார நட்சத்திர யோக கரண விடயங்கள், குருபூஜைத் தினங்கள, பிரதான ஆலயங்கள் தொடர்பான திருவிழாக்கள் போன்ற விடயங்கள் அடங்கியுள்ளன.

இப் பஞ்சாங்கம் திணைக்களத்தின் மூலம் இலவசமாக விநியோகிக்கபபடுபகின்றது. இதனைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 9'' நீளம் 6'' அகலம் கொண்ட பெரிய கடித உறையில் சுயமுகவரி எழுதி, ஒன்பது ரூபா முத்திரையை ஒட்டி, பணிப்பாளர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 248 1/1, காலி வீதி, கொழும்பு -04 எனும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் புதுவருடப் பஞ்சாங்கம்-2004 எனக் குறிப்பிட வேண்டும.

நேரில் பெறவிரும்புவோர், காரியாலய நேரங்களில் திணைக்களத்திற்கு வருகை தந்து பெற்றுக் கொள்ளலாம் என திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மாணவி மீது வல்லுறவு முயற்சி

(யாழ்ப்பாணம்)

கரம்பொன் தெற்கு ஊர்காவற்றுறைப் பகுதியில் பாடசாலை மாணவி மீது ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் பாலியல வல்லுறவுக்கான துன்புறுத்தல் முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

மேற்படி சம்பவத்தை உறுதிப் படுத்துவதாகத் தெரிவித்து யாழ். மாவட்ட அரசியல் துறை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நேற்று முன்தினம் மதியம் கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரியில் இருந்து பிரஸ்தாப மாணவி வீடு திரும்பிக் கொண்டிருந்த பொழுது ஈ.பி.டி.பி. உறுப்பினர் கிருபா என்பவர் இம் முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சம்பவத்தை அடுத்து மாணவியின் உறவினரும் அப்பகுதிப் பொதுமக்களும் ஊாகாவற்றுறை பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர் எனவும் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில மாணவியின் தந்தையால் செய்யபபட்ட முறைப்பாட்டை வாபஸ பெறும்படி ஈ.பி.டி.பி. அமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மதனராஜா அச்சுறுத்தி வருவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

## சமாதானப் பேச்சில் முஸ்லிம் மக்கள் தனித்தரப்பாக பங்கேற்ற வழிசெய்வேன்

### ஜனாதிபதி உரை

(கொழும்பு)

உயிர்த்துடிப்புள்ள நிரந்தர சமாதானமொன்றை எய்துவதே எமது நோக்கமாகும். இந்தச் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு நாம் தயாராகவிருக்கிறோம் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை செய்மதி ஊடாக கல்முனைப் பகுதி மக்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

எதிர்வரும் பொதுத்தேர்தலில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்று ஆட்சியமைத்ததும், நாட்டில் நிரந்தர சமாதானமொன்றை ஏற்படுத்தக்கூடிய வகையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளோம். இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் தரப்பும் தனித்தரப்பாக இடம்பெறவேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

எமது இந்த விருப்பத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில், பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தரப்பையும் இணைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து விளக்கமளிப்பதுடன், இதற்கு எமது சிபார்சையும் ஒத்துழைப்பையும் வழங்குவோம்.

அத்துடன், இதுவரைகாலமும் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி வந்த நாம், இனிவரும் காலங்களிலும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், அவர்களின் அபிலாஷைகளையும் ஏற்றுக் கொளளக் கூடிய வகையில் நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என உறுதியளித்துள்ளார். (உ-61,18)

# தேசவழமை

வரலாற்றுத்துறை பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

87

## 2. இலங்கையில் முக்குவர்: சில வரலாற்றுக் குறிப்புகள்

கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரத்துத் திருவேட்டைக் காவியத்தில் உள்ள இப்பாடல்கள் மட்டக்களப்பு முக்குவ வன்னிமை பற்றி மரபு வழியாக வந்த வரலாற்றுச் செய்திகளைக் கொண்டுள்ளதால் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. வன்னிமைக் குகன் குலம் என்று இவற்றிலே சொல்லப்படுகின்றது. முக்குவர் குகன் குலத்தவர் என்பது ஓர் ஐதீகம். எனவே குகன் குலத்தவர் என்று இப்பாடல்கள் குறிப்பிடும். வன்னிமையானவர் முக்குவர் சமூகத்தவர் என்பது தெளிவாகின்றது. மலையாள தேசத்துச் சமூரி மன்னனின் பிரதான துறைமுகப்பட்டணத்தைப் போர்த்துக்கேயர் காலம் முதலாக ஐரோப்பிய கலிக்கட் (Calicut) என்று குறிப்பிட்டனர். கலிக்கட் எனப்பட்ட நகரத்தை மட்டக்களப்பிலுள்ளோரிற் சிலர் காளிகட்டம் எனக் குறிப்பிட்டனர் என்று கொள்வது பொருத்தமானதாகும். எனவே மட் டக்களப்பு வன்னியரின் முன்னோர்கள் மலையாளதேசத்தில் இருந்து இராணுவ சேவை புரிவதற்கென வந்தவர்கள் என்பதும் அத்தகையோரின் தலைவர்கள் வன்னிமைப் பதவியைப் பெற்றனர் என்பதும் உணரப்படுகின்றது.

அனுராதபுரம்,பொலநறுவை ஆகிய நகரங்களில் இருந்து அரசுபுரிந்த மன்னர்களின் படைகளிலே கேரளர் வெவ்வேறு காலகட்டங்களிலே சேவை புரிந்தனர் என்பதை இலக்கியங்கள் மூலமாகவும் சாசனக் குறிப்புகளினாலும் அறிந்து கொள்ளமுடிகின்றது.கலிங்கமாகன் (1215-1255) 24,000 கேரளருடன் படையெடுத்து வந்து பொலநறுவையைக் கைப்பற்றினான் என்று சூழ வம்சம் கூறும். திருவேட்டைக்காவியப்பாடல் குறிப்பிடும் கலிங்களவாசன் என்னும் அரசன் மாகனாதல் வேண்டும். படையிற் சேவகம் புரிந்த முக்குவரின் தலைவருக்கு வன்னிமைப்பதவியை மகாலிங்களவாசன் கொடுத்தான் என்று சொல்லப்படுகின்றது. அத்துடன் மாகோன் தோப்பாவை (பொலநறுவை) யைக் கைப்பற்றிப் படையாட்சி வன்னியருக்குப் பகுத்துக்கொடுத்தான் என்றும் மட்டக்களப்பு பூர்வசரிதம் கூறுவதும் கவனித்தற்குரியதாகும்.

மட்டக்களப்பு முக்குவரிடையே (1) காலிங்ககுடி (2) படையாட்சி குடி (3) உலகிப்போடிகுடி (4) பணிக்கன்குடி (5) கச்சிலாகுடி (6) கோப்பிக்குடி (7) பெத்தான் குடி என்ற ஏழு வகையான குடிகள் இருந்தன. அவற்றுள் முதல் 3 குடிகளைச் சேர்ந்தவர்களும் முக்குவரிடையே முதன்மை பெற்றுள்ளனர். அவர்களுக்கு முறையே செங்கோல், சங்கு ,சுட்டுக்காற்சக்கரம் என்பன சிறப்பான சின்னங்களாகும். செங்கோலைச் சின்னமாகக் கொண்டிருந்த காலிங்க குடியினரே வன்னிபங்களா யிருந்தனர். படையாட்சி குடியினர் முன்னொரு காலத்தில் வன்னியருக்கும் அரசருக்கும் இராணுவ சேவை புரிந்துள்ளனர். வேளாண்மை செய்யும் முக்குவரிடையே உலகிப் போடி குடியார் முதன்மை பெற்றிருந்தனர்.

கிழக்கிலங்கையில் வேளாண்மை பெரும்பாலான முக்குவரின் தொழிலாகவிருந்து அரச படைகளிற் சேவகம் புரிந்த விளை நிலங்களை மானியமாகப் பெற்றதனால் முக்குவர் வேளாண்மையைப் புராதன தொழிலாக மேற்கொள்ள முடிந்தது.வீரசைவம், வைணவம் ஆகியவற்றின் செல்வாக்கு மட்டக்களப்பு முக்குவரிடையிற் காணப்பட்டது. காலிங்க மாகனுடைய காலத்தில் வீரசைவம் மட்டக்களப்பிலே பரவியதெனக் கருதலாம். முக்குவரின் பிரதான வழிபாட்டு நிலையமான கொக்கட்டிச்சோலைக் கோயில் மாகனின் காலத்தில் வீரசைவரின் வழிபாட்டுத்தலமாக அமைக்கப்பெற்றது என்று சொல் லப்படுகின்றது. அங்கு இன்றும் இலிங்க தாரிகளான சங்கமக் குருக்கள்மாரே பூசை செய் கின்றனர். அவர்களின் முன்னோர்கள் மல்லிகார்ஜுன புரத்திலிருந்தும் வந்தவர்களென்ற குறிப்பு ஏட்டுப்பிரதிகள் சிலவற்றில் உண்டு.

தான்தோன்றீஸ்வரம் வெருகலுக்கும் பூமுனைக்கும் இடையிலுள்ள நிலப்பரப்பிலே அமைந்துள்ள பிரதானமான சிவாலயமாகும். அது காலிங்காகுடி,படையாட்சி குடி, உலகிப்போடி குடி ஆகியவற்றைச் சேர்ந்த மூன்று வண்ணக்கராலே பரிபாலிக்கப்படுகின்றது. கிழக்கிலங்கை ஆலயங்களுக்குச் சிறப்பாகவுள்ள வண்ணக்கு முறையும் மருமக்கள் தாய முறையும் முக்குவரின் செல்வாக்கினால் ஏற்பட்ட வழமைகளாகும்.

ஆதன உரிமைகள் முதலானவை பற்றிய முக்குவரின் வழமைகள் அரசாங்கத்தினாலே தொகுக்கப்படவில்லை. ஆயினும் ஒல்லாந்தரின் ஆட்சியிலும் 1876 வரையான பிரித்தானிய ஆட்சிக்காலத்திலும் முக்குவரின் வழக்குகளை அவர்களின் வழமைகளின் அடிப்படையில் விசாரித்து நீதிமன்றங்கள் தீர்ப்புகளை வழங்கி வந்தன. அந்தத் தீர்ப்புகளையும் முதியோரின் கருத்துகளையும் ஆதாரமாகக் கொண்டு முக்குவரின் வழமைகளில் உள்ள அடிப்படைக் கோட்பாடுகளைத் தொகுத்து நூல்வடிவில் 1876ஆம் ஆண்டிலே கிறிஸ்தோபர், பிறிற்றோ வெளியிட்டனர். நீண்டகாலம் வழக்குரைஞராக மட்டக்களப்பிற் சேவை புரிந்தமையினாற் கிடைத்த அனுபவமுஞ் செல்வாக்கும் அவருக்கு இப்பணியை நிறைவேற்றுவதற்குப் பெரிதும் துணை புரிந்தன. ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற அந் நூலானது ஒரு தடவை மட்டுமே பிரசுரமாகியது. முக்குவர் சட்டம் 1876 ஆம் ஆண்டின் பின் வழக்கற்றுப் போய் விட்டதால் வழக்குரைஞரைப் பொறுத்தவரையில் அந் நூலைப் படிக்கவேண்டிய தேவை ஏற்படவில்லை. ஆயினும் ஒரு வரலாற்று மூலம் என்ற வகையில் அது மிகுந்த முக்கியத்துவம் கொண்டவொன்றாகும். எனவே அதைத் தமிழில் மொழி பெயர்த்து இத்தொகுதியிலே சேர்த்துள்ளோம். ஐரோப்பியர் காலத்து ஆவணங்களோடு இதனை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து மறைந்துள்ளனவாகத் தோன்றும் சில வரலாற்றம்சங்கள் தெளிவாகின்றன.

முக்குவரின் சமுதாயவமைப்பு குடிமுறையினை அடிப்படையாகக்கொண்டதாகும். குடி என்பது கிழக்கிலங்கையில் ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றது. அது உறவினாலே பந்த மான குடும்பங்கள் பலவற்றைக் கொண்ட ஒரு குழுவினரைக் குறிக்கும். குடி ஒவ்வொன்றிலும் உறவுகள் தாய் வழி மூலமானவை. அத்தொடர்புகளை வயிற்றுவார் என்று சொல்வது மரபாகும். கிழக்கிலங்கைத் தமிழரின் வழமைகள் பல மலையாள தேசத்தவரின் தொடர்புகளினால் ஏற்பட்டவை என்பதும் கவனித்தற்குரியதாகும்.

முக்குவர் வழமைத் சொத்துகள் எல்லாம் சொம் என்றே சொல்லப்பட்டன. சொத்துகள் முதுசொம், தேட்டம் என்ற வகைகளுக்குரியனவாகும். முன்னோர்கள் வழியாக ஒருவருக் குக்கிடைக்கும் சொத்துகள் முதுசொம் எனப்படும். முன்னோர்களை மாதாக்கள் என்றும் "தாதாக்கள் என்றும் " மூதாக்கள் என்றும் குறிப்பிடுவது வழமை. காலப்போக்கில் மாதாக்கள் என்பது தவிர்ந்த சொற்களிரண்டும் வழக்கொழிந்து விட்டன. தாய் தந்தை ஆகிய இரு வரதும் வழிமுறையான முன்னோர்களை மாதாக்கள் என்று குறிப்பிடுவது ஒரு கால கட்டத்து வழமையாகும். இந்நாட்களில் மாதாக்கள் என்ற சொல்லும் பேச்சு வழக்கில் இடம் பெறுவதில்லை.

முதுசொம்,தேட்டம் ஆகியவிரண்டும் வெவ்வேறானாவையாகவே கொள்ளப்படும். முது சொம் மான சொத்துகள் மூலம் கிடைக்கும் சம்பாத்தியங்கள் முதுசொமுடன் சேரும். முதுசொம், தோட்டம் என்பன கலக்குமிடத்து முழுச் சொத்தும் பெறுமதி கூடிய பாகத்தின் வகைக்குரியதாகும்.

முக்குவரின் ஆதன உரிமைகள் பற்றிய விதிகள் சிக்கலானவை. நிலங்களைப் பொறுத் தவரையில் ஆட்சியுரிமை, போகவுரிமை, உடைமையுரிமை முதலான வெவ்வேறான உரிமைகள் உண்டு. அவற்றின் பிரகாரம் ஒரு நிலத்திலே வெவ்வேறான வேர்கள் வெவ்வேறு உரிமைகளைக் கொண்டிருத்தலும் கூடும். முக்குவர் வழமைப்படி ஆதன உரிமைகள் பற்றிய வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதில் நீதிமன்றங்களுக்குச் சிரமங்கள் ஏற்பட்டன. (தொடரும்)

# செய்தித் துளிகள்

### சேவை நலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திருமதி சூ.ஜெயவீரசிங்கத்தின் பிரியாவிடை வைபவமும் சேவைக்காலப் பாராட்டு விழாவும் இன்று திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (து-18)

### திரைப்பட விழா,

மாவட்டத் திரைக் கலைச் சங்கங்களின் சம்மேளனமான "சலன சித்திரம்'' இலங்கைத் தமிழ்த் திரைப்பட விழா ஒன்றினை விரைவில் கொழும்பில் நடாத்தத் தீர்மானித்துள்ளது. இத்திரைப்பட விழாவை சிறப்பாக நடாத்துவதற்கு இலங்கைத் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் தங்களிடம் உள்ள திரைப்படங்கள் பற்றிய விபரங்களை "சலன சித்திரம்" த.பெ.இல -37 , தெஹிவளை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம் - 011 2722521 ஊடாகத் தொடர்பு கொள்ளலாம். (உ)

### வாக்களிப்பை தவறவிட்டோர்களுக்கு மீளவும் சந்தர்ப்பம்

(களுத்துறை)

தபால் மூல வாக்களிப்பை தவறவிட்டோரிடம் மீண்டும் வாக்கெடுப்பினை நடத்த வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தவர்களில் 50 சதவீதமானோருக்கு வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. இதில் குறிப்பாக முப்படையினர், பொலிஸார் ஆகியோருக்கு இச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்படியான துர்ப்பாக்கிய நிலை இந்தத் தடவையே தபால் மூல வாக்காளர்களுக்கு இடம்பெற்றிருக்கிறது என ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் இவ் வாக்கெடுப்பை நடத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளது. (உ-60,4)

### நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் பயிற்சிகளை முடித்து வெளியேறிய ஆசிரிய பயிலுநர்களுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் நடத்தப்படவுள்ளதாக மத்திய மாகாணக் கல்வி அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் இருந்து தற்போது 250 ஆசிரிய பயிலுநர்கள் பயிற்சி முடித்து வெளியேறியுள்ளனர். இவர்களுக்கான ஆசிரிய நியமனங்களை எதிர்வரும் மே மாதமளவில் வழங்குவதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இதன் ஒரு கட்டமாகவே, எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் இவ் ஆசிரிய பயிலுநர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன என மத்திய மாகாண கல்வி அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்துள்ளார். (உ-61-18)

### சத்துணவு

(பொன்னாலை)

வலிகாமம் தெற்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பராமரிப்பில் உள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு மேற்படி கொத்தணியால் இலவச சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது.

இதனால் 72முன்பள்ளிகளைச் சேர்ந்த 2ஆயிரத்து 600மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். (உ-49)

### வான் தடம்புரண்டு சாரதி ஸ்தலத்தில் பலி

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இரணைப்பாலைப் பகுதியில் ஹயஸ்வான் ஒன்று தடம்புரண்டதில் வாகனச் சாரதி ஸ்தலததிலேயே பலியானார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில், இரணைப்பாலை 5ஆம்வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா வினோதரன் (வயது-34) என்ற குடும்பஸ்தரே பரிதாபகரமாக உயிர் இழந்தவராவார். ஓடிக்கொண்டிருந்த ஹயஸ்வாகனத்தின் முன் சில்லு ஒன்று காற்றுப்போனமையினாலே வாகனம் தடம்புரண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழீழ காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

### பெண்ணின் சடலம் கரை ஒதுங்கியது

(ஆனையிறவு)

சுண்டிக்குளத்தில் உள்ள நல்ல தண்ணித் தொடுவாய் கடற்கரையில் இளம் பெண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை கரை ஒதுங்கிய இச் சடலம் தொடர்பாக தமிழீழ காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இச் சடலம் நீல நிறச் சட்டையுடனும் கறுப்பு நிறப் பாவாடையுடனும் காணப்படுவதாகவும் தமிழீழ காவல் துறையினர் தெரிவித்துள்ளனா. (உ-4,64)

### அருள்ஜோதி வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத குருபீடம், சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம் ஆகியவற்றின் மாதாந்த ஆன்மீக வெளியீடான, சிவாச்சாரியாரின் அருள் ஜோதி சஞ்சிகையின் மாசி- பங்குனி இதழ் வெளிவந்துள்ளது. (உ)

### மீளக்குடியமர முடியாத நிலையில் 3,801 குடும்பங்கள்

முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்த 3 ஆயிரத்து 801 குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் குடியேற முடியாத நிலையில் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த கால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் அகற்றபபடாமையினாலேயே இவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இக்குடும்பங்கள் தற்பொழுது உள்ளூர் அகதிகளாக அடிப்படை வசதிகள் அற்ற வாழ்விடங்களிலே வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-4,64)

### ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(பொன்னாலை)

தீவகம் வடக்கு - ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவிற்கான பிரதேச ஒருங்கிணைப்பக் குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில் பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது என்றும் சகல திணைக்களத் தலைவர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என்றும் உதவி அரச அதிபரால் கேட்கப்பட்டுள்ளது. (உ-49)

### விண்ணப்பப் படிவம்

(கோப்பாய்)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ள 2004ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள், பரீட்சைத் திணைக்களத்தால் பாட சாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ-79)

# அல்கெய்டா பயங்கரவாதிகளை அழித்தே தீருவேன்-முஷாரப் சூளுரை

(வாஷிங்டன்)

அல்-கெய்டா பயங்கரவாதிகளை ஒழித்தே தீருவேன் என்று பாகிஸ்தான் அதிபா முஷாரப் சபதம் எடுத்துள்ளார்.

பாகிஸ்தான் இராணுவம் அல்-கெய்தா அமைப்பை ஆதரிக்க வேண்டும். பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று அல்-கெய்டா அமைபபின் இரண்டாம் நிலை தலைவர் ஜவாஹிரி வீடியோ டேப் மூலம செய்து வெளியிட்டிருந்தார்.அச்செய்தி அல்ஜசீரா டிவி. மூலம் ஒளிபரப்பானது.

இதையடுத்து ஏபிசி நியூஸ் என்ற டி.வி சானலுக்கு பேட்டியளித்த முஷாரப் கூறியதாவது ஜவாஹிரி என்னை பழித்துப் பேசிக்கொண்டிருக்கிறர் நான் அவர்களை ஒழித்துக் கட்டப் போகின்றேன் என்று சொல்லிக்கொள்ள விருப்புகின்றேன். அவர் உயிருக்கும் பயநது ஒடிக்கொண்டிருக்கிறர்.ஒசாமா பின்லேடனுடன் அவர் ஏதோ ஒரு மலையில் ஒழிந்து கொண்டிருககிறார். அவர் ஒரு வீடியோ டேப மூலமாக என்னைப் பற்றி சொல்லியிருபபதால் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை நாங்கள் அவர்களை ஒழிககப்போவது மட்டும் உறுதி. அல்-கெய்டா பயங்கரவாத அமைப்பினர் ஒளந்திருக்கும் பழக்குடியினர் பகுதியன் தலைவர்கள் எல்லோரும் எங்களுக்கு ஒத்துழைப்புத் தருகின்றனர் என்றார் முஷாரப்.

பின்லேடனுடன் ஜவாஹிரியும் உங்களைப்பிடிப்பதற்கு முன்பாக அவாகளை நீங்கள் பிடிப்பீர்களா என்று கேட்டதற்கு, அது பற்றி 100 சதவீதம நிச்சயமாக சொல்ல முடியது என்றார் முஷாரப் எனது பாதுகாப்பில் குறை இருக்கின்றது என்ற அர்த்ததமதில் நான் இதைச் சொல்கின்றேன். ஆனால் விதியின் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. அல்-கெயடா தொடர்பான சிலவியங் களை நாங்கள் கண்டித்திருப்பதால் எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று உறுதயாக கூறுவேன் பாகிஸ்தானில இருந்து அல்-கெய்டா பயங்கரவாதிகளை ஒழித்துவிவேன் என்று உறுதியாக கூறிக்கொள்கின்றேன் என்றா அவர்.

பாகிஸ்தான் படையினர் சுற்றி வளைத்துள்ள பகுதியில் ஜவாஹிரி இருக்கிறாரா என்று கேட்டதற்கு நிசசியமாக தெரியாது என்றார் முஷாரப அங்குள்ள அல்- கெய்டாவினர் மிகவும் தீவரமாக எதிர்ப்புக் காட்டிவருகின்றனர் எனவே அங்கு அவர்களது முக்கிய தலைவர் இருக்கிறார் என்று கருதுகின்றோம் என்றார்.

(து)



பழைய டெல்லியில் உள்ள ஜும்மா மசூதியில் நேற்று தொழுகைக்காக வந்திருந்த குழந்தை ஒன்று அங்கிருந்த புறாக்களுடன் விளையாடி மகிழும் காட்சி.

# மரப்பட்டை அங்கிகள் போட்டு பட்டம்பெற்ற பிலிப்பைன்ஸ் மாணவர்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நகரில் பட்டமளிபபு விழா ஒன்று வித்தியாசமான முறையில் நடத்தப்பட்டது.

அண்மையில் நடைபெற்ற இப் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டதாரிகள் அணியும் அங்கிக்கு பதிலாக மரபபட்டைகளிலான விசேட ஆடைகளை பட்டதாரிகள் அணிந்திருந்தனர்.

தீவிரவாத செயறபாடுகளுக்கு எதிராக 6 வாரகால பாடநெறியொன்றைக் கற்று வெளியேறிய பட்டதாரிகளே இந்த வித்தியாசமான அங்கிகளை அணிந்திருந்தனர்.

இதேவேளை, இவர்கள் ஒரு பிராந்தியத்தில் உள்ள மரங்களை முறறாக அழித்தே மர ஆடைகளைத் தயாரித்தார்கள் என்றும் இதனால் இயற்கை வளம் அழிக்கப்பட்டுள்ளது என்றும் இவர்களுக்கு எதிராக தாம் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் பிலிப்பைன்ஸின் வன இலாகா தெரிவித்துள்ளது. (து-60,10)



இங்கிலாந்தைச் சேர்ந்த பிரிட்டிஷ் அருங்காட்சியகம், விக்டோரியா மற்றும் ஆல்பர்ட் அருங்காட்சியகம் ஆகியவை இணைந்து ரூ.7 கோடிக்கு, வியாழக்கிழமை வாங்கியுள்ள, 7-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பழம்பெருமை வாய்ந்த, அழகிய வேலைப்பாடுகளைக் கொண்ட, மிக மிக அரிய புத்தர் சிலை. 14 அங்குல உயரமுள்ள இச் செப்புச் சிலை, குப்தர் காலத்தைச் சேர்ந்தது. ஐரோப்பாவைச் சேர்ந்த அருங்கலைப் பொருள் சேகரிப்பாளரிடமிருந்து இச் சிலை வாங்கப்பட்டுள்ளது. பிரிட்டனின் இரு அருங்காட்சியகங்களிலும் மாறி மாறி இது காட்சிக்கு வைக்கப்படும்

WORLD NEWS உலக தரிசனம்



வெயிலுக்காக ஒதுங்கி சிமெண்ட் குழாயில் படுத்து உறங்கும் சென்னைவாசி.



கரூரிலிருந்து பெரம்பலூர் செல்லும் வழியில், திருச்சி மாவட்டம் ஜெம்புநாதபுரத்தில் வேனிலிருந்தவாறு சனிக்கிழமை பிரசாரம் செய்கிறார் முதல்வர் ஜெயலலிதா. உடன், அ.தி.மு.க. வேட்பாளர்கள் ராஜா என். பழனிசாமி (கரூர்), மு. பரஞ்சோதி.

# இஸ்ரேலிய பிரதமர் மீது ஊழல் வழக்கு தொடுக்க சட்ட வல்லுநர்கள் முயற்சி

(லண்டன்)

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஸரோன் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்திவரும் பிரதம வழக்குத்தொடுநர் ரட்ணா அலேஸ் குற்றப் பத்திரம் ஒன்றைத் தயாரித்துள்ளார்.

76 வயதான இஸ்ரேலிய பிரதமர் ஏரியல ஸரோன் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் படசத்தில் அவரை பிரதமா பதவியில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்,

இதுதொடர்பான குற்றப்பத்திரத்தை இன்னும் ஓரிருதினங்களில் சட்டமா அதிபரிடம் கையளிக்கப் போவதாகவும் பிரதம வழக்குத் தொடுநர் ரட்ணா அபேல் தெரிவித்தார். (உ,60,10)

# அடுத்த மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணிக்கு 265 இடங்கள்

## கருத்துக் கணிப்பு தெரிவிப்பு


மக்களவைத் தேர் தலில் பா.ஜ.க தலைமையி லான தேசிய ஜனநாயகக் கூட்டணி 265-க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றிபெறும்.

காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் 196 இடங்களைக் கைப்பற்றும் என்று ஜீ.டி.வி. நடத்திய கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜீ.டிவி. செய்திப் பிரிவுக்காக தலீம் இன்ஸ்டியூட் இந்த கருத்துக் கணிப்பை நடத்தியது.

ஜம்மு-காஷ்மீர், அருணாசல பிரதேசம், திரிபுரா, அந்தமான்-நிக்கோபார் தீவுகள் ஆகியஇடங்களைத்தவிர்த்து நாட்டின் இதர பகுதிகளைச் சேர்ந்த 65 மக்களவைத் தொகுதிகளில் நடத்தப் பட்ட இந்த கருத்துக் கணிப்பின் விவரம்: வாஜபேயிக்கு 51% ஆதரவு: பிரதமர் பதவிக்கான கருத்துக் கணிப்பில் வாஜபேயிக்கு 51 சதவீதம் பேரும் காங்கிரஸ் தலைவர் சோனி யா காந்திக்கு 28 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

பகுஜன் சமாஜ் தலைவர் மாயாவதி, உபி. முதல்வர் முலாயம் சிங் யாதவ், ராஷ்ட்ரீய ஜனதா தளம் தலைவர் லாலு பிரசாத் யாதவ் ஆகியோ ருக்கு மிகச் சொறப அளவாக 2 சதவீதம் பேர் மட்டுமே ஆதரவு தெரிவித் துள்ளனர்.

(து)



நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலையொட்டி ஆயத்தப் பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன. கட்சித் தலைவர்கள் நாடு முழுவதும் தேர்தல் பிரசாரங்களை செய்து வருகின்றனர். கட்சிகளிடையேதான் போட்டியே தவிர, எங்களுக்குள் அல்ல என்னும் விதத்தில் அ.இ.அ.தி.மு.க., காங்கிரஸ் வேட்பாளர்களின் பேனர்களை வரைந்து கொண்டிருக்கும் ஓவியர்கள்.

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை
- குறள்

வலம்புரி

## ஆள்வோருக்கு ஏற்றவாறு செயற்படும் பாதுகாப்புப் படை

நாட்டில் தேர்தல் வன்முறைகள் தாராளமாக மலிந்து போய்விட்டது. அது தொடர்பான முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் உள்ள முறைப்பாட்டுப் பதிவுப் புத்தகத்தில் கணிசமான இடத்தை அலங்கரிக்கின்றன. இத்தகைய வன்முறைகள் தேர்தல் காலங்களில் சர்வசாதாரணமாக நடந்து முடிவதற்குக் காரணம் என்னவெனில் காலத்திற்கு காலம் ஆட்சி மாறும் கட்சிகளுக்கு சலாம் போடும் நிலையில் பொலிஸாரும் முப்படைகளும் இருப்பதே ஆகும்.

பொதுவாக இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சியாக இருந்த கட்சி பாதிக்கப்படுவது வழமையானதொரு நிகழ்வாகும். அதாவது, ஆளும் கட்சியிடம் பாதுகாப்பு அமைச்சு இருப்பதினால் அவரின் கட்டளைக்கு அமைவாகவே பாதுகாப்புப் படை நடந்துகொள்ளும். இதனால் எதிர்க்கட்சி வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்களின் நிலை கடினமானதாகவே இருக்கும்.

எனினும் தற்போது பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம் இருப்பதால் ஆளும் கட்சியாக இருந்த ஐக்கியதேசிய முன்னணியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறைந்துவிட்டது. படையினர் ஜனாதிபதியின் உத்தரவுக்கமையவே தமது பணியை செய்து முடிக்கின்றனர்.

இத்தகைய பக்க சார்பான முறைமை இல்லாதொழிக்கப்படவேண்டுமாயின் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெறுவது வரையான காலப்பகுதியில் படையினருக்கு கட்டளையிடும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கே இருக்கவேண்டும். படையினருக்கு கட்டளையிடும் அதிகாரத்தை தேர்தல் ஆணையாளர் கொண்டிருக்கும்போதே ஓரளவேனும் நீதியான- நியாயமான தேர்தலை நடத்தமுடியும்.

இதனை விடுத்து தேர்தலில் போட்டியிடும் ஒருவரிடம் அல்லது கட்சி சார்ந்த ஒருவரிடம் பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிடும் அதிகாரம் இருக்கும்போது விரும்பியோ, விரும்பாமலோ அது பக்கசார்பான முடிவுகளுக்கு வழிவகுக்கும்.

இந்நிலைமை இருப்பதன் காரணமாகவே, தேர்தல் வன்முறைகள் தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் உள்ளது. இதன் ஒரு அங்கமாக முன்னாள் இந்துகலாசார அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான தியாகராசா மகேஸ்வரன் மீது இனந்தெரியாதோர் கொழும்பில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்களை இதுவரை பொலிஸார் கைதுசெய்யவில்லை. நாட்டில் வன்முறைகள் மலிந்துவிட்டது. சட்டம், ஒழுங்கு சிதைந்து விட்டது எனக்கூறி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்போது நடைபெறும் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் குறித்து மௌனம் காப்பது அவ்வளது நல்லதல்ல.

நாட்டில் சட்டம் ஒழுங்கு பேணப்படவேண்டுமாயின், ஜனநாயகம் நிலைக்க வேண்டுமாயின் மாற்றுக் கருத்துக்களும், அபிப்பிராயங்களும் வெளிவரவேண்டும். அதனை மக்கள் சீர்தூக்கி ஆராய்ந்து தமது முடிவுகளை வாக்களிப்பு மூலம் தெரியப்படுத்திக் கொள்வர் இதனை விடுத்து ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற நோக்கில் சட்டம், பாதுகாப்பு ஒழுங்குபடுத்தப்படுமாயின், அது நாட்டிற்குப் பெரும் பங்கத்தை ஏற்படுத்தும்.

ஆக, சட்டம், நீதி, ஒழுங்கு என்பவற்றை பேணிப் பாதுகாக்க வேண்டிய பொலிஸாரும், முப்படையினரும் தமது பணியை செவ்வனே நிறைவேற்றிக் கொள்வதற்கு தேர்தலில் பங்கேற்கும் எவரது கட்டளைகளும் உத்தரவுகளும் இருத்தல் ஆகாது.

எனவே, தேர்தல் காலங்களில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு வசதியாக பொலிஸ் நிர்வாகம் தேர்தல் ஆணையாளரிடம் இருப்பது மிகமிக அவசியமாகும். இல்லையேல் முறைகேடுகள் அற்ற ஓர் நீதியான தேர்தலை நடத்துவது கடினமான காரியமே.

# “அம்மா நலமா” திரையிட கடற்படையினர் தடை

### மண்கும்பானில் குழப்பம்

(கந்தர்மடம்)

நிதாசனம் வெளியீட்டகத்தினால் உருவாக்கப்பட்ட “அம்மா நலமா” திரைப்படத்தைக காண்பிக்கும் நிகழ்வை கடற்படையினர் குழப்பி யடித்துள்ளனர்.

கடந்த 23 ஆம்திகதி மண்கும்பான் கிராம அபிவிருத்திச் சங்க முன்றலில் மேற்படி திரைப்படம் காண் பிக்கப்பட்டுக் கொண்டிருந்தவேளை. அங்கு வந்திறங்கிய கடற்படையினரே உடனடியாக அதனை நிறுத்துமாறு வற்புறுத்திக் குழப் பத்தை விளைவித்துள்ளனர்.

இதனால் அப்பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர் ந்து அங்கு வந்திறங்கிய இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது மேற்படி திரைப்படமானது விடுதலைப் புலிகளின் போரியல் செயற்பாடுகளைச் சித் தரிப்பதாகவும் இது யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு மாறானது எனவும் கடற்படையினரால் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்யப் பட்டது.

எனினும் இது பொய் என சுட்டிக்காட்டிய நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அத்திரைப்படத்தைக் கண்காணிப்புக் குழுவினருக்கு திரையிட்டுக் காண்பித்தனர். இதனை யடுத்து இத திரைப்படத்தைக் காண்பிக்கும நிகழ்வை தொடர்ந்து நடத்தக கண்காணிப்புக்குழுவினர் அனுமதி வழங்கினர்.

(4,56)

## றோகண குமார படுகொலையின் பின்னணியில் ஜனாதிபதி சந்திரிகா!

(கொழும்பு)

தென்னிலங்கையின் பிரபல ஊடகவியலாளர் றோகண குமார படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இயங்கியிருப்பதாக பிரான்சின் எல்லைகள் அற்ற ஊட கவியலாளர்கள் அமைப்பு செய்தி வெளியிட்டுள்ளது.

பிரபல சிங்கள வார இதழான ‘சற்றான’ சஞ்சிகையின் செய்தி ஆசிரியர் றோகண குமாரவின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி உண்மை நிலை உலகிற்கு வெளிப்படுத் தப்பட வேண்டும் என்றும் இவ் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு வேண்டுகோள் விடுத் துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவுடன் தொடர்பான ஊழல் மோசடி விவகாரம் ஒன்றை அம்பலப்படுத்திய காரணத்தாலேயே றோகண குமார படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் ஜனாதி பதி செயலகத்தில் பணிபுரியும் உயரதிகாரிகள் றோகண குமாரவை கொலை செய்யும்படி உத்தர விட்டிருந்ததாகவும் தெரிவித்திருக்கும் இவ் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு, ஜனாதிபதியின் சிறப்பு படைத்துறைப் பிரிவினரே றோகண குமாரவை கொலை செய்திருப்பதாகவும் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, உலகின் பலம் வாய்ந்த அமைப்பாக விளங்கும் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்திருக்கும் இக் குற்றச் சாட்டுகள் அர்த்தமற்றவை என்று ஜனாதிபதியின் பேச்சாளர் ஜனதாஸ பீரிஸ் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(18)

## ஐ.தே.மு.ஆட்சிக்குவந்ததும் 30லட்சம்பேருக்குவேலைவாய்ப்பு

### பிரதமர் உறுதிமொழி

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் வேலையில்லாப் பிரச்சினைக்கு உடனடியாகக் தீர்வு காணப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வாரியப் பொலவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

நாட்டில் நீண்டகாலமாக நிலவி வரும் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐக்கிய தேசிய முன்னணி பல திட்டங்களைத் தயாரித்துள்ளது.

பொதுத் தேர்தல் முடிவடைந் ததும் அத்திட்டங்களை உடனடியாக அமுலுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கமைய அடுத்துவரும் 10 வருட காலத்தில் 30 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

(து-60,10)

### தினசரி தியானம்

ௐ

**விவேகச் சிந்தனைகள்**

பல மதங்களின் விலையுயர்ந்த கனவு இந்த உலகம் தான் நோயோ, வறுமையோ, துன்பங்களோ இல்லாத ஒரு காலத்தைப் பற்றி மக்களுள் பெரும்பான்மையினர் கனவுகண்டு கொண்டிருக்கின்றனர். அப்போது எங்கும் நன்மை மட்டும்தான் இருக்குமாம்! அதனால் செயல்முறை மதத்திற்கு பொருள் என்னவென்றால் தெருக்களை சுத்தமாக வையுங்கள், அழகாக வையுங்கள் அவ்வளவுதான்.

*சுவாமி விவேகானந்தர்.*

## பொலிஸ்மா அதிபரின் பதவி நீடிப்புக் குறித்து தொடரும் இழுபறிகள்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் அவரை பொலிஸ்மா அதிபராக நியமித்தமை குறித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக ஜனாதிபதிக்கும், பொலிஸ்மா அதிபருக்குமான நீதிமன்ற உத்தரவுக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கு எதிரான இந்த முறைப்பாடு முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் சீ.ரி.ஜன்ஸ் மற்றும் ஏனைய 9 பேரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப் பாட்டில், பொலிஸ்மா அதிபரின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர், ஜனாதிபதியால் பதவிக்காலம் நீடிக்கப்படுவதற்குப் பதிலாக, மீளவும் பதவி வழங்கப்பட்ட தாகவும், அரசியலமைப்புச் சபையின் ஆலோசனை பெறப்படாமல், தனது அதிகாரத்திற்கு மீறிய வகையில் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட ஒரு தன்னிச்சையான நடவடிக்கையே இது எனவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அத்துடன், பொலிஸ்மா அதிபரின் பதவியை செல்லுபடியற்ற தாக்குவதோடு, பொலிஸ் துறையின் அதிகாரங்களை பொறுப்பேறகுமாறு தேசியபொலிஸ் ஆணைக்குழுவின் தலைவரை பணிக்குமாறும் வழக்குத்தாக்கல் செய்த சீ.ரி.ஜன்ஸ் மற்றும் ஏனைய 9 பேரும் நீதிமன்றத்தைக் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையின் அரசியல் அமைப்பின்படி பொலிஸ் துறை தொடர்பான முடிவுகளை தன்னிச்சையாக எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(18)

## பாடநூல்கள் வந்து சேர்ந்தன

(இணுவில்)

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கான தரம் 6 தமிழ் மொழியும் இலக்கியமும், தரம் 6 ஆங்கிலம், தேசப்படப்பயிற்சி (தரம் 10-11) ஆகிய புத்தகங்கள் வந்து சேர்ந்ததாகவும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கல்விக்கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் அறிவித்துள்ளார்.

(உ,122)

### தவக்கால சிந்தனை-29

பாவம், அநீதி, நியாயம்,இவற்றின் தாக்கத்தை உணர ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதே ஆன்மீக வாதிகளின், சமயவாதிகளின் கடமை. ஒருவன் செய்யும் அநீதி யாரையெல்லாம் எப்படி யெல்லாம் பாதிக்கிறது என்பதை உணர்வு பூர்வமாக எடுத்துச்சொல்ல ஆட்கள் இல்லாததால் பாவம் பெருகிவிட்டன. மாறாக ஷஷஅநீதி செய், தீங்கிளை” என்ற அடிப்படை வாதிகளின் விசபோதனையை மக்கள் மனதை ஆக்கிரமிக்க ஆரம்பித்துவிட்டன. இத்தகைய இருள்மயமான உலகில் இன்றும் நம்பிக்கை ஒளியை ஏற்றிவைப்பது உலகில் ஒளியான யேசுவின் அருள் வாக்காகும்! யேசுவின் வார்த்தைகள் நம் வாழ்வின் வழியாக சமூகத்தில் ஒளி பாய்ச்சி இருள் நீக்கட்டும்.

**காவலன்**



# யார் இவர்?

சரியென நினைப்பதை தயங்காது சொல்பவர் / சொன்னவர்
சொல்வதை தவறாது செய்பவர்/செய்தவர்.
சொன்னதையும், செய்ததையும் தயக்கமின்றி ஒத்துக்கொள்பவர்.
பொய்யோ , புரட்டோ இல்லாதவர்.
பணத்திற்கோ, பதவிக்கோ விலை போகாதவர்.
கறைபடியாத கைகளுக்குச் சொந்தக்காரர்.
தொடர்ந்தும் கறைபடியாது காக்கும் உறுதி கொண்டவர்.
யாரையும் எழிதில் நம்பி விடும் அப்பாவித்தனமானவர்.
அதனால் கட்சிக்குள் நெருக்கடிகள் பலவற்றிற் காளானவர்.
அன்று நண்பர்களாக நடித்தவர்களால் கழுத்தறு பட்டவர்.
சொந்தமாக ஒரு கோடி கூட இல்லாதவர்- ஆனால்

வாதத்திறமையால் (சட்டத்தரணி) கோடி, கோடியாக சம்பாதிக்கும் திறமை கொண்டவர்.
கட்சி கொடுத்த பதவி மூலம், பெற்றவாகனங்களை விற்று பலகோடி பெற்றவரையும் தெரிந்தவர்.
கட்சி கொடுத்த உதவிமேயர் பதவி வழிமுறைகேடாக
சில கோடி பெற்றவரையும் தெரிந்தவர்-அவர்
அகதிகள் சார்பாக பாதுகாப்பு அமைச்சின்
அங்கீகாரம் பெற்று
கிடைத்த சீனியும், உருளைக்கிழங்கும், வெற்றிலையும் விற்றுப் பெற்றது எத்தனை இலட்சம்?
ஏழைமக்களுக்குக் கொடுத்த தையல் இயந்திரங்கள் தொடர்பாக பெற்ற கையு,ட்டல்கள் எத்தனை இலட்சம்?
எல்லாம் நிரூபிக்க ஆதாரம் உண்டு இவரிடம்.
அன்று தொட்டு இன்று வரை அவர் நிலை வறுமைக் கேட்டுக்கு அருகே தான்.
அன்று அவரது - நேர்மையைப் பாராட்டிய தம்பி ஒருவன்
இன்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளன்
இந்தத் தம்பி. பேசுவது ஒற்றுமை பற்றி, வாக்குக்கேட்பது மண்ணின் மைந்தன் என்று கூவி. போகட்டும் பாவம்.
பதவி ஆசை யாரைத்தான் விட்டது?
அந்தத் தம்பி பழக்கப்பட்டவர் "றோ" விடம் பணம் வாங்கி ஆனால் தலைவனுக்கு அந்தப்பழக்கம் இல்லை என்பதும் தம்பிக்குத் தெரியும். அவருக்கு கிடைக்கும் ஒவ்வொரு சதத்திற்கும் அவரிடம் கணக்கு உண்டு.
அதை எப்போதும் காட்டவும் முடியும் அவரால்.
முடியுமா உங்களால்? தந்தை செல்வா அவர்கள் என்றும் அவரால் பெரிதும் மதிக்கப்பட்டவர்.
அவரது தந்தை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்.
கருத்து மாறுபட்ட கட்சியில் இருந்தாலும், தந்தை செல்வாவை மதித்தவர் மதிப்பவர்.
யாரோ பைத்தியம் கேட்பது போல் அவர் தந்தையின் மைந்தன் அல்ல. ஆனால் அன்னாரைத் தந்தை போல் மதித்தவர். தந்தை மூடி வைத்த 'வீட்டை' திருடியவன் அவரல்ல.திருடிப்பின் அவர் பக்தன் போல் நடிக்கவுமில்லை.
தந்தையின் புனித சின்னம் "உதயசூரியன்" அதை
தலையைக் கொடுத்தேனும் காத்திட கடமைப்பட்டவர் நான் என்பவர். இக்கொள்கை வழி
அவர் படும் துன்பங்களும், துயரங்களும் சொல்லி முடியாது. இருப்பினும் அவர் பணி தொடரும்.
1972 ல் தமிழர் விடுதலைக்கூட்டணி அமைத்தோம்.
அதனைத் தந்தையுடன் இணைந்து ஸ்தாபித்தவர்களில் ஒருவர் அவர். கட்சியைத் துரோகிகள் கைப்பற்ற விட்டு விடுவாரா அவர்? போற்றுவார் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும் எனக்கென ஓர் கடமை, ஓர் இலட்சியம் உண்டு என உணர்ந்து செயற்படுபவர்.
எப்படியும் பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்ற எண்ணம் அவருக்கில்லை. தேடி வந்த பாராளுமன்றப் பதவியை இரு தடவை வேறு ஒருவர் பெற, விட்டுக் கொடுத்தவர் அவர். ஆனால் அவர்! - தகுதியற்றவர், நன்றியுணர்வு இல்லாதவர் என்பதைப் பின் அறிந்து நொந்து போனார். கட்சியின் கட்டளைப்படி, ஆறு ஆண்டு காலம் இருக்கவும் அப் பாராளுமன்றப் பதவியைத் துறந்தவர் அவர். 1972ஆம் ஆண்டு தொட்டு , இன்று வரை தப்பாமல் தந்தை வழி நடப்பவர் அவர்.

இதற்கு முன் தந்தை வேறு கட்சி, அவர் வேறு கட்சி கொள்கை வேறு ஆனால் இலட்சியம் ஒன்று .
தந்தையை மதித்தவர் , அவரைத் தரக்குறைவாக விமர்சித்தறியாதவர். இன்று கிடைத்தது "சுதந்திரன்" பத்திரிகை பழைய (1971) பிரதியின் மறு பிரசுரம் ஒன்று.
அவர் மீது சேறு பு,ச முயன்றனர் முன்னாள் கூட்டணியினர், இந்நாள் "முப்பெருந் துரோகிகள்" சுதந்திரன் பத்திரிகை தந்தை செல்வாவுடையது தான்- ஆனால் அதன் ஆசிரியர் அரிச்சந்திரன் அல்லவே. அன்று வெளியிட்டதொரு செய்தி- "ஆனந்த சங்கரியின் ஆதரவில் அக்கராயனில் குடியேற்றம்" என்று அபாண்டமான பொய்ச்செய்தி அது. சத்தியசீலன் "தந்தை செல்வாவே" புறந்தள்ளினார் அச் செய்தி யை .அது குடியேற்றமில்லை.
ஜே.வி.பி.(J.V.P) புரட்சியாளரின் புனர்வாழ்வு நிலையம்.
அதை அங்கே அனுமதிக்க வேண்டாம் என அமரர் கதிரவேற்பிள்ளை வேண்டினார். எமது பிரதேசம் அமைதிப்பு,ங்கா, பயங்கரவாதிகளுக்கு அங்கே இடமில்லை என்றார். பாராளுமன்ற விவாதம் அன்று அது பற்றியது தான். எமக்கொரு பிரதேசம் இருக்கா, எனக் கேட்க அவர் என்றும் பைத்தியக்காரனாக இருக்கவில்லை. சபாநாய கரிடம் முறையிட்டார். அவரது உரை பொய்யாகவும், திரித்தும் எழுதப்பட்டிருக்கிறது என்று சபாநாயகரின் கட்டளைப்படி, அவரது முழு உரையும் சுதந்திரன் பத்திரிகையின் அடுத்த இதழில் பிரசுரிக்கப்பட்டது.
ஆசிரியரின் வருத்தத்துடன் சுதந்திரனைச் சாட்சிக்கிழுத்து பிரசுரம் வெளியிட்ட இன்றைய "ஆசிரியருக்கு" சரித்திரம் தெரியவில்லை- பாவம் அந்த உரையை முழுமையாகப் பிரசுரிக்கலாமே ! "கெட்டிக்காரன் புழுகு எட்டு நாட்களுக்கு மட்டுமே" என்பதை அறிந்து வைத்திருக்கிறார்கள் போலும்.
காவடி ஆட்டம் நன்றாகத் தான் இருக்கின்றது.
ஆனால் ஆட்கள் தான் வேறு. ஆட்டுவிப்பவர்களும் வேறு.
எங்கள் தலைவன் காவடி ஆடுவதுமில்லை.
அவரை எவரும் ஆட்டுவிக்கவும் முடியாது.
எங்கள் தலைவன் ஆனந்தசங்கரி அவர்கள் 52 வருட அரசியல் வாழ்வில் மெல்ல, மெல்ல வளர்ச்சி பெற்று இன்று இமயமென வளர்ந்து நிற்பவர். இவ்வளர்ச்சிக் காலத்தில் கட்சித் தொண்டனாக , கிராம சபை- பட்டின சபைத் தலைவனாக, நாடாளுமன்ற உறுப்பினராக , கட்சியின் மூத்த துணைத்தலைவனாக , இன்று தலைவ னாக உயர்ந்து பிரகாசிக்கின்றார்.
கண்கள் கூசி நின்ற துரோகிகள் வஞ்சகமாக வீழ்த்திவிட முயன்று , தோற்றனர்.
மக்கள் அவர் பக்கம், சட்டமும் நீதியும் அவர் பக்கம், தெய்வ நீதி அவர் பக்கம் என்றும் உண்மை, நேர்மை வெல்லும் இது நிச்சயம்- நிச்சயம்- நிச்சயம்.

**அன்பான வாக்காளப் பெருமக்களே!**
**இன்று எம்மைக் காக்கக் கூடிய தகைமை பெற்ற தலைவன் திரு வீ. ஆனந்தசங்கரி அவர்கள் மட்டுமே. உங்கள் பொன்னான வாக்குகளை அன்போடு அள்ளிக்கொடுத்து பெரு வெற்றியை அவருக்குத் தேடிக் கொடுங்கள்.**
**மறவாதீர்கள்!**
**சுயேட்சைக்குழு ! சின்னம்- பூட்டு- இல.4**

அனுசரணை: பெ.சூரியமூர்த்தி கிளிநொச்சி ஆனந்தபுரம். கிராம அபிவிருத்திச் சங்க ஸ்தாபகத் தலைவர்.

**சுயேச்சைக் குழு 1**



X 4

அறிவித்தல்:- எக்காரணம் கொண்டும் சுயேச்சைக்குழு - 1 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளமாட்டாது என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றோம். தயவுசெய்து வீண் வதந்திகளை நம்பவேண்டாம். (C/0028)